CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ:

சிருங்கேரி

ஸ்ரீ மலஹானிகரேசுவரர் ஆலய
கும்பாபிஷேக மலர்

ஆசிரியர் :

K. V. சுப்பரத்னம்

பிப்ரவரி 1985

விலை ரூ. 4-00

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வெளியீடு :

ஸ்ரீ சங்கர க்ருபா (தமிழ் மாத பத்திரிகை)

97, அம்மாமண்டபம் ரோடு,

ஸ்ரீரங்கம்.

அச்சிட்டோர் :

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸந்நிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன்னுரை

ஒரு ஸ்தலத்துக்குப்போனால் அங்குள்ள மூர்த்தி, தீர்த்தம், க்ஷேத்ரம் இவைகளின் விசேஷத்தைத் தெரிந்துகொண்டால் தான் யாத்திரையின் பலனை அடையலாம். பொழுதுபோக்குக் காக பல ஊர்களைப் பார்க்கும் நோக்குடன் போய் வருபவர் களுக்கும், இந்த விவரங்கள் உத்ஸாகத்தை அளிக்கும். அந்த வகையில் இச்சிறு புஸ்தகம் எல்லோருக்கும் உபயோக மாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

மூர்த்திகள்

சிருங்கேரியில் உள்ள பல மூர்த்திகளின் விசேஷத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதில் பிரதான மூர்த்தி ஸ்ரீ சாரதாதேவி. ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளால் பாறையின்மேல் வரையப்பட்ட ஸ்ரீ சக்ரத்தின்மேல் ஸ்ரீ சாரதா தேவியின் ஆலயம் அமைந்துள்ளது. ஸ்ரீ சாரதாதேவியின் கர்ப்பகிருஹம் அந்தப் பாறையின்மேல் வரையப்பட்ட ஸ்ரீ சக்ரத்தின்மேல் இருக்கிறது. இதுதவிற, இங்கு ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் சந்நிதி, ஸ்ரீ ஆதிசங்கரரின் சந்நிதி ஆகிய இரண்டும் இவ்வாலயத்திற்குள் அமைந்துள்ளன. இந்த ஊரின் கடை வீதியின் மத்தியில் இருந்து வடக்கே போகும் தெரு வழியாய் சற்று தூரம் சென்றால், ஒரு சிறு குன்று உள்ளது. அக்குன்றின் உச்சியில் அமைந்துள்ளது ஒரு சிவன் கோவில். இங்குள்ள மும்மூர்த்திகளில் ஸ்ரீ மலஹானிகரேச்வரர், (ஈசுவரன்) பவானி தேவி (அம்மன்) முக்கியமானவை. இதர மூர்த்திகளும் இவ்வாலயத்தில் உண்டு.

இவைகளைத்தவிற, இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு ஆம்னாய பீடங்களில் முதலாவதான "ஸ்ரீ சாரதாபீடம்" அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் பீடாதிபதி ஸ்ரீ சுரேசுவராச்சாரியார் ஆவர். அவருக்குப்பின் அவிச்சின்ன பரம்பரையாக வந்த சாரதாபீடாதிபதிகளில் இப்போது பீடத்தில் இருக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் 35-வது பீடாதிபதி ஆவர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவருக்குப்பின் பீடத்துக்கு ரெவேண்டி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ஸ்ரீ பாரதீதீர்த்த ஸ்வாமிகளையும் மேற்சொன்ன 35-வது பீடாதிபதிகளே தேர்ந்து அமைத்திருக்கிறார்கள். இந்தப் பீடத்தில் அமர்ந்த ஒவ்வொரு பீடாதிபதியும் ஜீவன்முக்தர்கள் என்பது தெரிந்த விஷயமே. மேலே சொல்லப்பட்ட தேவாலயங்கள் எல்லாம் இந்த ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளின் ஆணைக்குட்பட்டு இருப்பவை. அந்த தேவஸ்தானங்களில் பீடாதிபதிகளே முக்கியமான தினங்களில் பூஜையைச் செய்வார்கள். மற்ற காலங்களில் பீடாதிபதிகளால் அமைக்கப் பட்டவர்கள் பூஜை செய்வார்கள். இந்த தேவாலயங்களில் பிரசித்திப்பெற் ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி இப்பிரசுரம் வெளிவருகிறது.

இந்த ஸ்தலத்தில் ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளில் முதல்வரான ஸ்ரீ சுரேசுவரரின் ஸமாதி உள்ளது. இதுதவிர அவருக்குப்பின் இப்பீடத்தில் அமர்ந்து பின் ஸித்தி அடைந்த பல பீடாதிபதிகளின் ஸமாதிகளும் உள்ளன. இவை எல்லாவற்றிலும் சாஸ்திர முறைப்படி வழிபாடு நடக்கிறது. இவைகளில் முக்கியமானது ஸ்ரீ வித்யாசங்கரரின் ஸமாதி (ஆலயம்). இவைகளை நேரில் தரிசனம் செய்து ரசிக்கவும்.

க்ஷேத்ரம்: சிருங்கேரி இது சாந்தி நிலவும் ஸ்தலம் என்று ஸ்ரீ ஆதிசங்கரரால் தேர்ந்து எடுக்கப்பட்டது. சாதாரணமாக ஒன்றுக்கொன்று விரோதியான பாம்பும், தவளையும் நேசமாக இங்கு விளங்கியதை அவர் கண்டார். இதை விளக்க துங்கா நதிக்கரையில் ஒரு கருங்கல் உருவத்தையும் காணலாம். மலைப்பிரதேசத்தின் உச்சியில் இந்த ஊர் அமைந்துள்ளது. வாஸத்துக்கு யோக்கியமாயும், மனோரஞ்சகமாகவும் உள்ளது. இது ஒருமுனிசிபாலிட்டி. ஒரு ஹைஸ்கூல், ஒரு (ஆங்கில முறை) கல்லூரியும் இங்கு உள்ளன. ஸ்ரீ மடத்திலை் நடத்தப்படும் வேத, வேதாந்த பாடசாலை உள்ளது. இங்கு இலவசமாக வேத அத்தியயனமும், சாஸ்திராப்யாஸமும் கொடுக்கப்படுகிறது. இங்கு தரிசனத்திற்கு வரும் மடத்தின் சிஷ்யர்கள் தங்குவதற்காக ஸ்ரீ மடத்தில் வசதிகளைச் செய்திருக்கிறார்கள். துங்கா நதிக்குத் தென்கரையில் ஸ்ரீ ஜகத்குருக்களின் ஆசிரமம் அமைந்துள்ளது. அது நரஸிம்மவனம் எனப்படும். இங்கு 33, 34-வது பீடாதிபதிகளின் ஸமாதிகள் அமைந்துள்ளன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தீர்த்தம்: "கங்கா ஸ்நானம் துங்காபானம்" என்பது பழமொழி-இந்நகரம் துங்கா நதியின் வடகரையின் மேல் அமைந்துள்ளது. வருஷம் முழுவதும் இந்த நதியில் ஜலம் உண்டு. இதில் ஸ்நானம் செய்வதால் புண்ணியம் கிடைப்பதுடன் சில ரோகங்களும் நிவாரணமாகின்றன என்று சொல்லுகிறார்கள். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இங்கு பலர் வந்து தங்கி சுகம் பெறுகிறார்கள். மழை காலத்தில் மழை மிகவும் அதிகமாக இருக்கும். அப்படியே பனி காலத்தில் குளிர் மிகவும் கடுமையாக இருக்கும். ஆனால் உடலுக்கு எந்தக் காலத்திலும் கெடுதல் ஏற்படாது. இந்த துங்கா நதி மிகவும் ஆழமானதும், ஜலம் அதிக வேகமாகவும் இருக்கும். இது ஓடும் இடம் சேரில்லாமல் சிறு கற்களும், மணலும் கொண்ட இடமாக இருக்கிறது. இந்த ஸ்தலத்துக்கு கிழக்கே சில மைல்களுக்குப்பின் பத்ரா நதி துங்கையில் கலக்கிறது. அதற்குப் பின் இந்த நதி "துங்கபத்ரா" எனப்படும். இது பின்னர் கிருஷ்ணா நதியில் கலக்கிறது. சிருங்கேரியின் பல முக்கிய அம்சங்களை நேரில் கண்டு தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ மலஹானிகரேசுவர ஆலய கும்பாபிஷேகம் 11-2-1985ல் நடக்க ஏற்பாடாகி இருக்கிறது. அதையொட்டி எல்லோரும் விவரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டி இச்சிறு வெளியீடு கொண்டுவரப்பட்டுள்ளது.

அந்தக் கோவிலில் குடிகொண்டிருக்கும் மூர்த்திகளைப் பற்றிய ஸ்தோத்திரங்கள், அங்கு நடக்கும் வழிபாடுகள் இவைகளின் விவரங்களை இப்புத்தகத்தின் உள்ளே காணலாம்.

ஆஸ்திகர்கள் இதைப் படித்து நல்ல பலனைப் பெருமாறு ஸ்ரீ மலஹானிகரேசுவரரையும், ஸ்ரீ பவானீ தேவியையும் ப்ரார்த்திக்கும்;

ஈரோடு
1—1—1985

சிருங்கேரி தாஸன்
K. V. சுப்பரத்னம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

"एषा शङ्करभारती विजयते निर्वाणसौख्यप्रदा"

ருஷ்யச்ருங்கபுரேசுவராய நம:

பிரார்த்தனை

शान्तामानसहंसं कान्तारासक्तमुनिवरैः सेव्यम् ।
शान्ताहं कृतिवेद्यं कान्तार्धं नौमि शृंगशिवम् ॥

சாந்தா மானஸ ஹம்ஸம் காந்தாராஸக்த முனிவரை:
ஸேவ்யம் ।
சாந்தஹங்க்ருதி வேத்யம் காந்தார்த்தம் நௌமி
ச்ருங்கசிவம் ॥

சாந்தமாகிய மானஸ ஸரோவரத்தில் ஹம்சமாக விளங்குபவரும், காட்டில் வசிப்பதில் விருப்பமுள்ள முனிசிரேஷ்டர்களால் ஸேவிக்கப்பட்டவரும், மனநிம்மதி (சாந்தி) உடையவர்களால் அனுஸந்தானம் செய்யப்படக்கூடியவரும், பாதி சரீரத்தில் தேவியை உடையவருமான சிருங்ககிரிக்கு மங்களத்தை உண்டுபண்ணுபவரை நமஸ்கரிக்கிறேன்.

— பக்திஸுதாதரங்கிணீ.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி மஹாஸ்வாமிகளின் உபதேசம்

ஸம்ஸ்க்ருத பாஷையின் பெருமை

உலகில் ஸம்ஸ்க்ருத பாஷை மிகவும் புராதனமானது. நம் பாரத பூமியிலுள்ள யாவருக்கும் சொந்தமானது. நம் நாட்டில் வேறூன்றியிருக்கும் மிகச் சிறந்த நாகரீகமெல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷையால் ஏற்பட்டது. அதனாலேயே வளர்ச்சியுமடைந்துள்ளது. அது குறிப்பிட்ட ஏதோ சிலருக்குத்தான் சொந்தமென்றும், மற்றவருக்கு சொந்தம் இல்லையென்றும் நினைப்பது தவறு. மத விஷயங்களுக்காக சிலர் ஸம்ஸ்க்ருத பாஷையை உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பது வாஸ்தவம். ஆனால் அதைக்கொண்டு பிறர் அதைக் கற்றுக்கொள்ளக்கூடாது என்பதில்லை. உலகிலுள்ள யாவரும் அதைக் கற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் உலகிலுள்ள யாவருக்கும் பொதுவான விஷயங்களெல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷையில்தான் இருக்கின்றன. வித்யாஸ்தானம் என்ற பெயரில் 14 பிரிவுகளாக ஸம்ஸ்க்ருத பாஷை பிரிக்கப்பட்டு இருக்கிறது. மத விஷயங்களும் ஸம்ஸ்க்ருத பாஷையின் ஓர் அம்சம்தான். மற்றவை எல்லாம் யாவரும் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டியது. எல்லோருக்கும் உபயோகப்படக் கூடியது. மேலும் சிற்பம், சித்திரம் முதலான கலைகளுக்கு எல்லாம் இன்றும் ஸம்ஸ்க்ருத மொழியே அடிப்படையாக உள்ளது.

வேதங்கள், புராணங்கள், காவ்யங்கள் இவைகள் ஸம்ஸ்க்ருத இலக்கியத்தின் மூன்று பிரிவுகள். இதில் வேதம் மிகப் புனிதமானது. அதிலுள்ள ஒவ்வொரு அக்ஷரமும் மந்திர மாக அமைந்திருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் எல்லோருக்கும் புரியக்கூடியவைகளாயில்லை. அதில் சிலருக்குத்தான் அதிகாரம் என்று நம் முன்னோர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். பின்னால் வேதங்களில் கூறப்பட்டு உள்ள கருத்துக்களை எல்லோரும் சுலபமாகப் புரிந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொள்ளும் ரீதியில் கதைகளும், உபதேசங்களும் அடங்கிய புராணங்கள் ஏற்பட்டன. ரஸிகத்தன்மை மிகுந்தவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப காவ்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

முற்காலத்தில் யாவரும் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்று வந்தனர். குருவிடம் அவர்களுக்கு மிகுந்த பக்தியிருந்ததாலும், குருவிற்கும் சிஷ்யர்களிடம் வாத்ஸல்யமிருந்ததாலும், அவரும் தாம் கற்பிக்கும் விஷயத்தில் பூர்ணமான ஞானத்தைப் பெற்றிருந்ததுடன் சிஷ்யர்களைத் தம்மிடம் ஆகர்ஷித்துக் கொள்ளும் இயல்புடையவராயிருந்தாலும் முற்காலத்தில் யாவரும் நல்ல அறிவையும் விநயத்தையும் பெற்று உலகிற்கும் உபகாரிகளாயிருந்தார்கள் அக்காலத்தில் ஆசிரியர்கள் "குலபதி" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டனர். ஸமூகததிலும் அவர்களுக்கு தனிச் சிறப்பும் கௌரவமும் அளிக்கப்பட்டது. இக்காலததில் வாசிப்பவர்களுக்கு ஆசிரியரிடம் பக்தியோ, சிரத்தையோ இல்லை. குருவிற்கும் சிஷ்யர்களிடம் அன்பு இல்லை. கடையில் பணத்தைக் கொடுத்துப் பண்டததை வாங்குவதுபோல வியாபார முறையில் தான் கல்வி கற்றுக்கொள்கின்றனர். அதனால் அது சரியான பயனைக்கொடுக்கவில்லை.

இனிமேலாவது இவ்விதமில்லாமல் குருவிடம் மிகுந்த பக்தி சிரத்தையுடனும், நல்லொழுக்கத்துடனும் ஸம்ஸ்க்ருத பாஷையை யாவரும் கற்றுக்கொள்ளவேண்டும். ஆசிரியர்களும் சிஷ்யர்களிடம் மிகுந்த வாத்ஸல்யத்துடன் அவர்களின் அபிவிருத்தியை மனதில் எண்ணி கற்றுக்கொடுக்கவேண்டும். அதனால் அவர்களுக்கு ஸமூகத்திலும் சிறந்த அந்தஸ்து ஏற்படும். இம்மாதிரியான வித்யாப்யாஸத்தால் நல்லொழுக்கம், வினயம் முதலான நற்குணங்கள் எங்கும் நிறைந்து அவர்களால் தேசத்திற்கே க்ஷேமமேற்படும். ஆகையால் யாவரும் மேற்கூறிய முறையில் ஸம்ஸ்க்ருத பாஷையைக் கற்று அதில் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களை அறிந்து, அதன்படி நடந்து ஸகல சிரேயஸ்ஸுகளையும் அடைவார்களாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் ஆலய வழிபாடு விவரங்களைக் கவனிக்கும்போது சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதிபதிகளில் இரண்டு மஹான்களின் ஏற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

I ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவநரஸிம்ஹபாரதீ I (1599—1622)

ஸ்ரீ சாரதாபீடத்தின் 24வது பீடாதிபதி. இவர் சிவகீதைக்கு உரை எழுதியவர். (இது அச்சாகி இருக்கிறது). இவர் தமிழ்நாடு மதுரை ஜில்லாவில் வத்தலகுண்டு என்ற கிராமத்தில் இருந்துவந்ததாகத் தெரியவருகிறது. இவர் ஆந்திரர். ஸகல சாஸ்திரங்களையும் பால்யத்திலேயே கற்றவர். மந்திரசித்தி பெற்றவர். ஸ்ரீ மடத்தின் குருபரம்பராஸ்தோத்திரத்தில்,

नृसिंहभारतीनाम्नोऽभिनवोपपदाय च ।
शिलास्तम्भेऽपि विघ्नेशदर्शिने योगिने नमः ॥

ந்ருஸிம்ஹ பாரதீ நாம்னே
அபிநவோப பதாய ச ।
சிலாஸ்தம்பே அபி விக்னேச
தர்சினே யோகினே நம: ॥

என்று புகழப்படுகிறார். இந்த விசேஷ அடைமொழிக்குக் காரணம் சொல்லுவோம்.

சிருங்கேரி கிராமத்தின் மத்தியில் உள்ள குன்றின்மேல் அமைந்திருக்கும் விபாண்டக மகரிஷியால் உபாஸித்து வரப்பட்ட ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் தேவாலயத்துக்கு முதல் முதலாக தரிசனத்துக்கு சென்றபோது, அவ்வாலயத்தில் ஸ்ரீ விக்னேசுவரமூர்த்தி இல்லாததைக் கண்டு மூலஸ்தானத்தின் பூஜைக்காகக் கொண்டுவரப்பட்டிருந்த சாமக்ரியைகளிலிருந்து ஒரு மஞ்சள் துண்டைக் கொண்டுவரச் செய்து அந்த ஈர மஞ்சளால் கோவிலின் முன் மண்டபத்தில் இருக்கும் ஒரு கல்தூணில் ஒரு கணபதி உருவத்தை வரைந்து அதற்குப் பூஜை செய்து பின் கர்ப்பகிருஹத்துக்குப் பூஜை செய்யச் சென்றார். மஞ்சளினால் அடையாளமிட்டு கணபதியாக ஆவாஹனம் செய்த இடத்தில், கொஞ்சம் கொஞ்சமாக அவ்வுருவம் பெருத்து வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இப்போது தூணுக்கு வெளியில் நன்ருக நீட்டிக்கொண்டு இருக்கும் ஸ்ரீ கணபதி மூர்த்தி தெரிகிறது இதைத்தான் "ஸ்தம்ப கணபதி" என்று தியான சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவருக்குப் பின் இந்த பீடத்தை அலங்கரித்து வரும் எல்லா பீடாதிபதிகளும் இந்த ஸ்தம்பகணபதிக்கு முதலில் பூஜை செய்துவிட்டுத்தான் மற்ற மூர்த்திகளின் பூஜையை செய்துவருகிருர்கள்.

இந்த ஆசாரியாருக்கு அடுத்து வந்த இவருடைய சிஷ்யரும் 25-வது பீடாதிபதியுமான ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதீ ஸ்வாமிகள் (I) (1622-1663) அவர்களும் தன் க்ரந்தத்தில் இதைக் குறித்து,

शिलास्तम्भोद्भवं तत्र गणेशं वरदायिनम् ।
क्रमेण वर्धमानं च दृष्ट्वोपास्त नमस्ततेः ॥

சிலாஸ்தம்போத்பவம் தத்ர
கணேசம் வரதாயினம் ।
க்ரமேண வர்த்தமானம் ச
த்ருஷ்ட்வோபாஸ்த நமஸ்ததே: ॥

என்கிருர். "க்ரமேண வர்த்தமானம்" (காலக்ரமத்தில் வளர்ந்து கொண்டுவரும்) என்பதைக் கவனிக்கவும். இந்தக் கம்பத்தில் ஸ்ரீ கணபதி மூர்த்தி அமைந்திருக்கும் இடம் மட்டும், கம்பத்தின் பின்புறம் தட்டினுல் உள்ளே இடைவெளியிருப்பது போன்ற (போல் போல்) சப்தம் வருகிறது. கல் கம்பத்தின் மற்ற பாகங்களில் பின்புறம் தட்டினுல் கெட்டியான சப்தம் வருகிறது.

இந்த ஸ்தம்ப கணபதியின் பூஜைக்காக கி. பி. 1685ல் சிவப்பநாய்க்கனுக்கும், ராணி லிங்கம்மாஜிக்கும் பிறந்த சித்தமாஞ்ஜீ என்ற அரசகுமாரியினுல் ஒரு மானியம் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த பீடாதிபதிகள் பெரிய தபோ மகிமை கொண்டவர். இந்த பிரதேசத்தை அப்போது ஆண்டுவந்த கேலாடி நாய்க்கர் வம்சத்தவரால் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்துக்குப் பல மான்யங்கள் (மூக்கர் நாடு) கொடுக்கப்பட்டன. ஸ்ரீ மடத்தின் கட்டிடமும் விஸ்தரிக்கப்பட்டது. ஒரு அக்ரஹாரமும் அமைக்கப்பட்டது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

II ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதீ (I) 1622—1663)

இவர் ஸ்ரீசாரதாபீடத்தில் 25-வது பீடாதிபதியாக அமைந்தார். இவரைத் தேர்ந்தெடுத்தவர் முன் குறிப்பிட்ட 24-வது பீடாதிபதிகளேதான். இவர் பூர்வாச்ரமத்தில் மதுரை ஜில்லாவில், வைகையாறும், மஞ்சளாறும் (ஹரித்ரா நதி) கலக்கும் இடத்தில் உள்ள அர்த்தனரீசுவரபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. அங்குள்ள ஒரு குன்றின் பக்கம் வரதராஜப்பெருமாள் ஆலயம் உண்டு. இது வத்தலகுண்டு என்ற ஊருக்கு சமீபம் உள்ளது. இப்போது இதற்கு குன்று வாரங் கோட்டை என்றும். ஜாண்ட்ரப்பட்டி என்றும் சொல்லு கிருர்கள். இவருடைய 16 வயதில் இவருக்கு சந்நியாசம் கொடுக்கப்பட்டது. தன் மாமாவின் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணத்துடன் சிருங்கேரிக்குப் போன நரசிம்மன் என்ற இந்த பிரும்மசாரியை முந்திய குரு ஸ்ரீஅபிநவ நரசிம்மபாரதீ ஸ்வாமிகள் கட்டாயப்படுத்தி ஸந்நியாசி யாக்கினுர். ஏற்கனவே நல்ல விரக்தி கொண்டிருந்த நரசிம்ம பிரும்மச்சாரி அதை ஏற்று, பின்னிட்டு மஹா வியாபகராகவும், தபஸ்வியாகவம் விளங்கினுர். இவர் காலத்தில் சிருங்கேரி ஸமஸ்தானத்தின் சொத்துக்களுக்கு சிறப்பு அம்சம் அமைந்தது.

எல்லா சிருங்கேரி பீடாதிபதிகளையும்போல் இந்த மகானுக்கும் ஸ்ரீ மலஹானிகரேசுவர ஆலய வழிபாட்டில் ஈடுபாடு உண்டு. அதில் இவர் செய்திருக்கும் சில அமைப்புகள் இப்போதும் அமுலில் இருந்துவருகின்றன. அவைகளைக் கீழே காண்போம்.

3

சிருங்கேரி நகரில் மத்தியிலிருக்கும் குன்றின்மேல் ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் ஆலயம் அமைந்துள்ளது. இது ஆதிசங்கரரின் காலத்திலேயே இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. இக்குன்றின்மேல் ஒரு சிவாலயம் உண்டு. இக்குன்றின்மேல் ஏறுவதற்குப் படிகள் உண்டு. சமீபத்தில் குன்றின்மேல் மோட்டார் வாகனம் போகக்கூடிய சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள பெரிய சிவலிங்கம்—மூலஸ்தானமானது மனதின் அழுக்கைப் போக்கடிக்கும் திறம் வாய்ந்தது என்பதால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த சிவலிங்கமூர்த்திக்கு மலஹானிகரேசுவரர் என்ற பெயர் அமைந்தது. இங்குள்ள தேவியின் பெயர் ஸ்ரீ பவானி அம்பாள், சிவலிங்கம் அமைந்திருக்கும் இடத்தில் ஆதியில் விபாண்டகமகரிஷி தபசு செய்துகொண்டிருந்து பின் மறைந்தார் என்று சொல்லப்படுகிறது.

இந்த இரண்டு மூர்த்திகளைத் தவிர இங்கு சந்திரன் (பத்து கைகளுடன்) நரசிம்மன், வீரபத்ரர், ஹனுமான், காலிய மர்த்தனர், துர்கை, ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஷண்முகர், ஸ்ரீ வேணு-கோபாலன் ஆகிய மூர்த்திகளின் உருவங்கள் கமலங்களில் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயம் கல்லினாலும் கல் தூண்களாலும் அமைக்கப் பட்ட வடிவம். விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்டதாயும் அதற்கு முன்பு இந்த ஆலயத்துக்கு மரத்தால் கூறை அமைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்பது சரித்திர நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவு.

வருஷம் முழுவதும் இங்கு பல உத்ஸவங்கள் சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதிபதிகளின் நேர்பார்வையில் நடக்கின்றன. அவைகளில் இரண்டு உத்ஸவங்களை இங்கு குறிப்பிடுகிறோம். பிரதி வருஷம் வைசாக சுத்த நவராத்ரி முதல் வைசாக பஹுள பிரதமை முடிய ஐந்து நாட்கள் "திருக்கல்யாண உத்ஸவம்" நடக்கும். இது கி. பி. 18ம் நூற்றாண்டிலிருந்து அமுலில் இருக்கிறது. மாசி மாதத்தில் அமாவாசையன்று ரதோத்ஸவம் நடக்கும். அது முடிந்ததும் ஒரு சிறு உத்ஸவம் நடக்கும். இதற்கு "ஸந்தான உத்ஸவம்" என்று பெயர்.

முதலில் சொல்லப்பட்ட திருக்கல்யாண உத்ஸவத்தில் குறிப்பிடவேண்டிய அம்சங்கள்: விவாகத்துக்கு வரவேண்டும் என்று தேவதைகளை அழைப்பது, கன்னிகாதான சமயத்தில் ஈசுவரனுக்கும், அம்பிகைக்கும் விஸ்தாரமான பிரவரம் சொல்லுவது, விவாஹமான பின்னர் நலுங்கு நடத்துவது முதலானவைகள். இந்த உத்ஸவத்தில் சொல்லப்படும் வாக்கியங்களும், சுலோகங்களும் மிகுந்த அர்த்தபுஷ்டியுடன் கூடியவை. நலுங்கு உத்ஸவத்துக்கு ஹரித்ரார்ப்பணம் என்று சொல்லுகிறார்கள். இதில் அம்பிகை பகவானைப் பார்த்து விளையாட்டாக சில சுலோகங்களும், பகவான் அம்பிகையைப் பார்த்து விளையாட்டாக சில சுலோகங்களும் சொல்வதுண்டு.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அம்பிகை பகவானைப் பார்த்துச் சொல்லும் சுலோகங்களாவன :

स्वामिन् भूतपते दिगम्बरतनो स्थाणो पशूनां पते
रुद्राक्षाभरणाहिकुण्डल विरूपाक्षोक्षवाहप्रिय ।
स्थूलब्रह्मकपालहार विलसद्भस्माङ्गरागाधुना
शम्भो शङ्कर चन्द्रशेखर विभो कुर्यां हरिद्रार्पणम् ॥

ஸ்வாமின் பூதபதே திகம்பர தநோ ஸ்தாணோ
பஶூநாம் பதே
ருத்ராக்ஷாபரணாஹிகுண்டல விரூபாக்ஷோக்ஷ
வாஹப்ரிய ।
ஸ்தூல ப்ரஹ்மகபால ஹார விலஸத்
பஸ்மாங்கராகாதுநா
ஶம்போ ஶங்கர சந்த்ரஶேகர விபோ குர்யாம்
ஹரித்ரார்ப்பணம் ॥

ஹே ஸ்வாமின்! பூதங்களுக்குப் பதியே, திக்குகளை வஸ்திரமாகத் தரிக்கும் தேகத்தோடுகூடினவரே, அசைவற்றவரே, பசுபதியே, ருத்திராக்ஷத்தை ஆபரணமாகக் கொண்டவரே, ஸர்ப்பத்தைக் குண்டலமாகத் தரிப்பவரே விலக்ஷணமான கண்களோடு கூடியவரே, காளையில் ஏறுவதில் பிரியமுள்ளவரே, பிரம்மாவினுடைய பருத்த மண்டையோட்டை ஹாரமாக உடையவரே, பிரகாசிக்கிற விபூதியினால் மேல்பூச்சு செய்துகொண்டவரே, ஹே சம்போ, சந்திரசேகர, விபோ உமக்கு இப்பொழுது நான் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

[பகவானைப் பார்த்து அம்பிகையானவள் அவரிடமுள்ள சிறந்த அம்சங்களை வெளியிடாமல் பிரீதி விசேஷத்தினால் விளையாட்டாக அவரிடம் வெறுக்கத் தக்கதாகத் தோன்றக் கூடிய அம்சங்களையே இதில் குறிப்பிடுகிறாள்.] (1)

स्वामिन् किं नाम गोत्रं किमु कुलमपि ते कः पिता का च माता
को वा बन्धुः क्व वा ते वसतिरपि च के भ्रातरो यातराः काः ।
सर्वं मे वक्तुमर्हस्यथ ननु भगवन् ज्ञातवृत्तान्तभावा
पश्चाद्वक्ष्यामि शम्भो तव च बहुमतं नाम संबोधनाद्वा ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்வாமின் கிம் நாம கோத்ரம் கிமு குலமபி தே கஃ
பிதா கா ச மாதா
கோ வா பந்து: க்வ வா தே வஸதிரபி ச கே
ப்ராதரோ யாதர: கா:।
ஸர்வம் மே வக்துமர்ஹஸ்யத நநு பகவன்
ஞாதவ்ருத்தாந்தபாவா
பச்சாத் வக்ஷ்யாமி ஶம்போ தவ ச பஹுமதம் நாம
ஸம்போதனுத்வா ॥

ஹே ஸ்வாமின் தங்களுக்கு என்ன கோத்ரம்? தங்களுடைய குலம்தான் எது? தங்களது தகப்பனர் யார்? தாயார் யார்? பந்துக்கள் யாவர்? நீங்கள் இருக்குமிடம் எது? தங்களுக்குக் கூடப்பிறந்த ஸஹோதரர்கள் யார்? அவர்களின் மனைவிகள் யார்? இவை யாவற்றையும் எனக்குச் சொல்லும். பிறகு உங்களுடைய விருத்தாந்தத்தையும் ஸ்வபாவத்தையும் அறிந்துகொண்டு நான் பின்னல், ஏ சம்போ தங்களுடைய மதிப்புக்கு உரியதான பெயரைச் சொல்லுகிறேன்.

[பகவான் அநாதிஸித்தராயிருப்பதுடன் எவ்வித மாதா பிதாக்களுக்கும் பிறக்காமல், ஒருவராகவே தனித்து தனக்கு எது இருப்பிடமென்று சொல்லுவதற்கில்லாமல், ஸர்வ வியாபியாக இருந்துவருகிருரென்பதை லோகரீதியாக அவருக்கு கோத்ராதிகள் கிடையாதென்று அம்பிகை விளையாட்டாக எடுத்துக்காட்டுகிருள்]. (2)

स्वामिन् देवशिखामणे दनुजभिन्नेत्रारविन्दार्चितौ
दुष्टापस्मृतिदानवादिदलने निष्कोशनिस्त्रिंशकौ ।
भक्त्या संश्रयतां तु पङ्कजमृदू पादौ प्रदेहि प्रभो
शम्भो शङ्कर चन्द्रशेखर विभो कुर्यां हरिद्रार्पणम् ॥

ஸ்வாமின் தேவஶிகாமணே தனுஜபிந்
நேத்ராரவிந்தார்சிதௌ
துஷ்டாபஸ்ம்ருதி தானவாதி தலனே நிஷ்கோஶ
நிஸ்த்ரிம்ஶகௌ ।
பக்த்யா ஸம்ச்ரயதாம் து பங்கஜம்ருதூ பாதௌ
ப்ரதேஹி ப்ரபோ
ஶம்போ ஶங்கர சந்த்ரசேகர விபோ குர்யாம்
ஹரித்ரார்ப்பணம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஹே ஸ்வாமின், தேவ சிரேஷ்டரே, தானவர்களை ஸம்ஹாரம் செய்த மஹாவிஷ்ணுவினுடைய கண்ணுகிற அரவிந்தத்தினுல் அர்ச்சிக்கப்பட்டவைகளும் துஷ்டனுன அபஸ்மிருதியென்கிற தானவன் முதலானவர்களை பிளப்பதில் உறுவின கத்திப்போல் பிரகாசிப்பவைகளும், பக்தியோடு ஆச்ரயிப்பவர்களுக்குத் தாமரைபோல் மிருதுவாயிருப்பவைகளுமான தங்கள் பாதங்களை எனக்குக் கொடும். பிரபோ! சம்போ, சங்கர, சந்திரசேகர, விபோ அவைகளில் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

[முன் சுலோகங்களில் கண்ட நிந்தா ஸ்துதி ரீதியைவிட்டு இதில் பகவானுடைய பாதாரவிந்த மஹிமையை அம்பிகை எடுத்துச்சொல்லுகிருள்.] (3)

स्वामिन् लोकगुरो श्रितामरतरो कल्याणमूर्ते विभो
लीलामात्रशरासनीकृतधरौ बाणीकृतश्रीधरौ ।
लोकानामभयङ्करौ किसलयश्रीगर्वसर्वंकषौ
देहि श्रीकरुणानिधे तव करौ कुर्यां हरिद्रार्पणम् ॥

ஸ்வாமின் லோககுரோ ச்ரிதாமரதரோ கல்யாண மூர்த்தே விபோ
லீலாமாத்ரமராஸநீக்ருத தரௌ பாணீக்ருத ஸ்ரீதரௌ ।
லோகாநாமபயங்கரௌ கிஸலய ஸ்ரீகர்வ ஸர்வங்கஷௌ
தேஹி ஸ்ரீகருணுநிதே தவ கரௌ குர்யாம் ஹரித்ரார்ப்பணம் ॥

ஹே ஸ்வாமின்! ஸகல உலகங்களுக்கும் குருவாயிருப்பவரே! தங்களை ஆச்ரயிப்பவர்களுக்கு கல்ப விருக்ஷமாக இருப்பவரே, மங்களகரமான மேனியுடையவரே, ஹே விபோ, ஹே கருணுநிதியே! விளையாட்டாக மலையை தனுஸாகச் செய்தவைகளும், மஹாவிஷ்ணுவை அம்பாக வைத்துக் கொண்டவைகளும், லோகங்களுக்கு அபயத்தைக் கொடுப்பவைகளும், துளிரின் அழகுக்கு ஏற்பட்ட கர்வம் பூராவையும் போக்கடிக்கக் கூடியவைகளுமான தங்கள் கைகளை எனக்குக் கொடும். நான் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

[இந்த சுலோகத்தினுல் கைகளுடைய அழகையும், பலத்தையும் வர்ணிப்பதுடன் அவைகள் உலகுக்கு அபயப் பிரதானம் செய்கின்றன என்பதையும் அம்பிகை குறிப்பிடுகிருள்]

स्वामिन्निन्दुकृशानुभानुनयनैर्देदीप्यमानानन
श्रुत्यन्तैरपि चिन्तनीयमहिमन् संचिन्तनान्मुक्तिदम् ।
उद्यद्भानुसहस्रकोटिसदृशं देहि प्रसन्नं मुखं
शम्भो शङ्कर चन्द्रशेखर विभो कुर्यां हरिद्रार्पणम् ॥

ஸ்வாமின்னிந்துக்ருஶானுபானுநயனைர் தேதீப்யமாநாநந
ச்ருத்யந்தைரபி சிந்தனீய மஹிமன் ஸஞ்சிந்தனுன் முக்திதம் ।
உத்யத்பானு ஸஹஸ்ர கோடி ஸத்ருஶம் தேஹி ப்ரஸன்னம் முகம்
ஶம்போ ஶங்கர சந்த்ரஶேகர விபோ குர்யாம் ஹரித்ரார்ப்பணம் ॥

ஹே ஸ்வாமின்! சந்திரன், அக்னி சூரியன் ஆகிய மூவரைக் கண்களாக வைத்துக்கொண்டு நன்கு பிரகாசிக்கிற முகத்தோடு கூடினவரே, வேதாந்த வாக்கியங்களால்கூட ஆலோசிக்க வேண்டிய மஹிமையுடன் கூடியவரே, எப்பொழுதும் அனுஸந்தானம் பண்ணுபவர்களுக்கு முக்தியைக் கொடுப்பதும் ஆயிரம் கோடி ஸூரியர்கள் உதயமானதுபோல் பிரகாசிக்கும் தங்களுடைய பிரஸன்னமான முகத்தை காட்டும். ஹே சம்போ, சங்கர சந்திரசேகர விபோ நான் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

[முதல் சுலோகத்தில் பகவானுடைய கண்கள் விருபமாயிருக்கிறதென்பதை நிந்தாருபமாக எடுத்துக்காட்டிய அம்பிகை இந்த சுலோகத்தில் அக்கண்களையே சிலாகித்துக் கூறுகிருள். அவருடைய முகத்தின் பிரகாசத்திற்கு உபமானம் கிடையாதென்பதைக் காட்டுவதற்காக உலகத்தில் ஸம்பவிக்கக்கூடாத, ஸஹஸ்ரகோடி ஸூரியர்கள் ஸமகாலத்தில் உதயமானுல் உண்டாகும் பிரகாசத்தை உபமானமாகச் சொல்லுகிருள். அத்தனை ஸூரியர்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸமகாலத்தில் உதயமானால் அந்தப் பிரகாசம் நம் கண்ணை பாதிக்கக்கூடியதென்று நினைத்து பகவானுடைய முகத்திற்கு பிரஸன்னம் என்னும் ஒரு விசேஷணத்தையும் அம்பிகை சொல்லுகிறாள். அம்முகத்தின் மஹிமையை வேதங்கள் எடுத்துச்சொல்ல முடியாமற்போனாலும் பக்தர்களுடைய தியானத்திற்கு விஷயமாகி முக்தியைக் கொடுக்கவல்லதென்பதையும் காட்டுகிறாள்.]

स्वामिन् सर्वसुरासुरादिमकुटप्रत्युप्तरत्नाङ्कुर-
श्रीनीराजितपादपीठमहिताकुण्ठप्रभावार्पय ।
कल्पान्तायितकालकूटकवलश्रीनीलकण्ठं प्रभो
कस्तूरीघनसारकुङ्कुममयैर्लिम्पाम्यहं चन्दनैः ॥ ६ ॥

ஸ்வாமின் ஸர்வ ஸுராஸுராதி மகுட
ப்ரத்யுப்தரத்னாங்குர
ஸ்ரீநீராஜித பாதபீட மஹிதாகுண்ட ப்ரபாவார்பய ।
கல்பாந்தாயித காலகூட கபள ஸ்ரீநீலகண்டம் ப்ரபோ
கஸ்தூரீ கனஸார குங்கும மயைர் லிம்பாம்யஹம்
சந்தனை: ॥

ஹே ஸ்வாமின்! தேவர், அஸுரர் முதலான எல்லோருடைய கிரீடங்களில் பதித்த ரத்ன பிரகாசத்தினாலே நீராஜனம் செய்யப்பட்ட பாததலத்தினால் சோபிக்கிறவரே, எவ்விதத் தடங்கலுமில்லாத பிரபாவத்தோடு கூடியவரே, ஹே பிரபோ, பிரளய காலத்தில் ஏற்படுவதுபோலுள்ள காலகூட விஷத்தை விழுங்கினதினால் கருப்பாயிருக்கிற தங்களுடைய கழுத்தைக் காட்டும். கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ இவைகளுடன் கூடிய சந்தனத்தினால் அதைப் பூசுகிறேன்.

[அமிருதமதன காலத்தில் காலகூட விஷம் ஏற்பட்டபோது தங்களை ரக்ஷிக்க வேண்டுமென்று ஸகல தேவர்களும் அஸுரர்களும் காலில் விழுந்து பிரார்த்திக்கும்போது உடனே அவ்விஷத்தை உண்டு கழுத்தில் நிறுத்திய பகவானுடைய அங்கங்களில் முக்கியமான அக்கழுத்தை இந்த சுலோகத்தில் அம்பிகை சிலாகிக்கிறாள்.] (6)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

स्वामिन् निर्जरसार्वभौम जगतां सृष्टिस्थितिव्यत्यय-
क्रीडालोलकटाक्ष दीनजनतासंरक्षणे दीक्षित ।
अर्धेन्दुद्युतिविभ्रमं प्रविलसद्भस्मत्रिपुण्ड्रोज्ज्वलं
फालं दर्शय फालनेत्र कलये श्रीकुङ्कुमैश्चित्रकम् ॥ ७ ॥

ஸ்வாமின் நிர்ஜர ஸார்வபௌம ஜகதாம் ஸ்ருஷ்டி
ஸ்திதி வ்யத்யய
க்ரீடாலோல கடாக்ஷ தீனஜநதா ஸம்ரக்ஷணே தீக்ஷித I
அர்த்தேந்து த்யுதிவிப்ரமம ப்ரவிலஸத் பஸ்ம
த்ரிபுண்ட்ரோஜ்வலம்
பாலம் தர்சய பாலநேத்ர கலயே ஸ்ரீகுங்குமைச்சித்ரகம் II

ஹே ஸ்வாமின்! தேவதைகளுக்கெல்லாம் சக்ரவர்த்தியே! ஜகத்துக்களை ஸ்ருஷ்டி செய்வது, ரக்ஷிப்பது, ஸம்ஹரிப்பது இவைகளை விளையாட்டாகக் கண் அசைப்பினுலேயே செய்கிறவரே, தீனர்களான ஜனங்களைக் காப்பாற்றுவதில் விரதம் கொண்டவரே நெற்றிக்கண் உடையவரே, பாதி சந்திரன் போல் பிரகாசிக்கிறதும் அழகாக பஸ்ம த்ரிபுண்ட்ரத்தினுல் ஜ்வலிக்கிறதுமான தங்களுடைய நெற்றியைக் காட்டும். அதில் நான் அழகான குங்குமத்தினுல் பொட்டு இடுகிறேன்.

[பகவானுக்கு மூன்று கண்கள் இருந்தபோதிலும் நடுக் கண்ணுகிய அக்னியைத் திறக்காமலிருக்கும் காலத்தில்தான் உலகம் வாழ முடியுமானதினுல் அவ்வக்னி இருக்கக்கூடிய ஸ்தானமான நடுநெற்றியில் அதை மறைத்துப் பொட்டு இட அம்பிகை விரும்புகிருள்.]

स्वामिन् मौक्तिकपङ्क्तिभिर्विरचितां रत्नैर्विचित्रैश्शुभां
आरार्तिं कलये विलोकय दयां मय्यादरादर्पय ।
कामं पूरय पूर्णपात्रमपि मे देहि प्रसन्नोऽधुना
भूयात् ते शुभमङ्गलं जय जय श्रीचन्द्रमौले सदा ॥

ஸ்வாமின் மௌக்திக பங்க்திபிர் விரசிதாம் ரத்னைர்
விசித்ரை: ஶுபாம்
ஆரார்திம் கலயே விலோகய தயாம் மய்யாதாரதர்பய I

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காமம்பூரய பூர்ணபாத்ரமபி மே தேஹி ப்ரஸந்நோऽதுநா
பூயாத் தே ஶுபமங்களம் ஜய ஜய ஸ்ரீசந்த்ரமௌளே
ஸதா ||

ஹே ஸ்வாமின் ! முத்து வரிசைகளினாலும் பலவித ரத்னங்களினாலும் சுபமாகப் பிரகாசிக்கிற ஆராத்தியை செய்கிறேன். தாங்கள் நிமிர்ந்துபார்த்து வெகு ஆதரவுடன் என்னிடத்தில் தயவு வைக்கவேண்டும். என்னுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொடும். தாங்கள் பிரஸன்னராக இருந்து இப்பொழுது எனக்கு ப்ரீதியுடன் வஸ்த்ராலங்காராதிகளைக் கொடும். தங்களுக்கு சுபமங்களம் ஏற்படட்டும் ஹே சந்திரமௌளே, எப்பொழுதும் ஜயத்தோடு உத்கிருஷ்டமாய் விளங்குவீராக.

[இவ்விதம் முதலிரண்டு சுலோகங்களினால் பகவானை ஸம்போதனம் செய்து, மூன்றாவது சுலோகத்தினால் கால்களிலும் நாலாவது சுலோகத்தினால் கைகளிலும், ஐந்தாவது சுலோகத்தினால் முகத்திலும், மஞ்சளைப்பூசி, ஆறாவது சுலோகத்தினால் கழுத்தில் சந்தனம் பூசி ஏழாவது சுலோகத்தினால் நெற்றியில் குங்குமப் பொட்டு இட்டுவிட்டு, இப்பொழுது பகவானுடைய கருணையைப் பிரார்த்தித்து அவருக்கு ஆராத்தி எடுக்கிறாள்.]

स्वामिन् द्वौ तनयौ षडास्यगजराजास्यौ समुत्पादयन्
मय्यावेशितचित्तमप्यचलयन्नन्यामनालोकयन् ।
मद्वाक्यं शिरसा वहन् अनुदिनं मामेव संभावयन्
शम्भो कल्पशतं सुखी भव मया मूर्ध्न्यक्षताः सन्तु ते ॥

ஸ்வாமின் த்வௌ தநயௌ ஷடாஸ்ய கஜராஜாஸ்யௌ
ஸமுத்பாதயன்
மய்யாவேஶித சித்தமப்யசலயன் அந்யாமநாலோகயன் ।
மத்வாக்யம் ஶிரஸா வஹன் அநுதினம் மாமேவ
ஸம்பாவயன்
ஶம்போ கல்பஶதம் ஸுகீ பவ மயா மூர்த்ன்யக்ஷதா:
ஸந்து தே ||

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஹே ஸ்வாமின்! ஆறுமுகன், கஜமுகன் ஆகிய இரு புத்திரர்களை உண்டுபண்ணி, என்னிடத்தில் தாங்கள் வைத்து இருக்கும் மனதைச் சலிக்கவிடாமல், அன்னிய ஸ்திரீயைப் பார்க்காமல் என்னுடைய வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து, பிரதிதினம் என்னையே கௌரவித்துக்கொண்டு, ஹே சம்போ! தாங்கள் நூற்றுக்கணக்கான கல்பங்கள் என்னுடன் கூட ஸுகமாயிருக்க வேண்டும். தங்கள் சிரஸில் இவ்வக்ஷதைகளை அர்ப்பணம் செய்கிறேன்.

[முன் சுலோகத்தில் கேட்ட கருணை இவ்வாறு இருக்க வேண்டுமென்று இந்த சுலோகத்தில் விவரமாக அம்பிகை எடுத்துச் சொல்கிருள்.] (9)

हास्यप्रायः समय इति हा किञ्चिदुक्तं दुरुक्तं
तत् क्षन्तव्यं शिव शिव मया साहसं मे सहस्व ।
ईक्षस्वारादतिकरुणया मां भजस्व प्रपन्नां
शम्भो स्वामिन् हृदयदयितां सन्निधौ सन्निधेहि ॥

ஹாஸ்ய ப்ராய: ஸமய இதி ஹா கிஞ்சிதுக்தம் துருக்தம்
தத் க்ஷந்தவ்யம் ஶிவ ஶிவ மயா ஸாஹஸம் மே ஸஹஸ்வ ।
ஈக்ஷஸ்வாராததிகருணயா மாம் பஜஸ்வ ப்ரபந்நாம்
ஶம்போ ஸ்வாமின் ஹ்ருதய தயிதாம் ஸந்நிதௌ
ஸந்நிதேஹி ॥

[இவ்விதம் கடைசியாக அரத்தியெடுத்து அக்ஷதைகளினால் அர்ச்சித்துப் பிரார்த்தித்தும், பகவான் யாதொன்றும் சொல்லாமலிருந்ததைப் பார்த்து, தான் ஆரம்பத்தில் நிந்தாஸ்துதியாகச் சொன்னதில் அபசாரமேற்பட்டிருக்குமோ என்று பயந்து, இந்தசுலோகத்தில் மன்னிப்புக் கேட்கிருள்]

இந்த ஸமயம் விளையாட்டையே பிரதானமாக உடையதென்று நினைத்து நான் ஏதோ சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன், அதைத் தாங்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும். என்னுடைய ஸாஹஸத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். சீக்கிரமாய் மிகுந்த கருணையுடன் என்னைப் பாரும், சரணமடைந்திருக்கும் என்னை ஏற்றுக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொள்ளும், ஹே ஸ்வாமின்! சம்போ! தங்கள் ஹிருதயத்திற்குப் பிரியமான என்னைத் தங்கள் ஸமீபத்தில் வைத்துக் கொள்ளும் என்று பிரார்த்திக்கிருள்.

பகவான் அம்பிகையைப் பார்த்து சொல்லும் சுலோகங்களாவன:—

काली करालीति च कालरात्रिः महोदरी रौद्रमुखीति दुर्गे ।
नामानुरूपा ननु भूमरूपा रूपेण च त्वं तव वेद्मि तत्वम् ॥

காளீ கராளீதி ச காளராத்ரி:
மஹோதரீ ரௌத்ர முகீதி துர்கே ।
நாமானுரூபா நநு பூமரூபா
ரூபேண ச த்வம் தவ வேத்மி தத்வம் ॥

உனக்கு காளி, கராளி, காலராத்ரி, மஹோதரி, ரௌத்ரமுகி, துர்க்கா (கருப்பாயிருப்பவள், பயங்கரமாயிருப்பவள், பிரளயகாலத்து இரவுபோல் இருப்பவள், பெரிய வயறு படைத்தவள், பயங்கரமான முகத்தோடுகூடினவள், கிட்ட நெருங்கமுடியாதவள்) என்று பலவிதமான நாமாக்களும், அதற்குத் தகுந்த உருவங்களுமிருக்கின்றன. அந்தந்த ரூபத்திற்குத் தகுந்தபடி உன் ஸ்வபாவம் இருக்கும். உன்னுடைய உருவத்திலிருந்தே உன்னுடைய ஸ்வபாவத்தை அறிகிறேன்.

[அம்பிகை விளையாட்டாகத் தன்னைப்பற்றி நிந்தை செய்ததில் தனக்கு எவ்வித வருத்தமும் இல்லை என்பதைக் காட்டுவதற்காக அவளைப்பற்றித் தானும் விளையாட்டாகவே நிந்திப்பதுபோல் பரமேசர் இந்த சுலோகத்தில் எடுத்துச் சொல்கிருர்] (1)

कान्ते कामितदानकल्पलतिके कल्याणि कामेश्वरि
प्रालेयाचलभागधेयकलिते श्रीमेनकाकन्यके ।
पादौ पङ्कजकोमलौ झणझणन्मञ्जीरशिञ्जारवौ
प्राणप्रेयसि पार्वति प्रदिश मे कुर्यां हरिद्रार्पणम् ॥ २ ॥

காந்தே காமித தாந கல்பலதிகே கல்யாணி காமேச்வரி
ப்ராலேயாசல பாகதேய கலிதே ஸ்ரீமேநகா கந்யகே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாதௌ பங்கஜ கோமலௌ ஜணஜணன் மஞ்ஜீர
ஸிஞ்ஞாரவௌ
ப்ராண ப்ரேயஸி பார்வதி ப்ரதிஸ மே குர்யாம்
ஹரித்ரார்ப்பணம் ||

ஹே பிரியே! கேட்டதைக் கொடுப்பதில் கல்பலதை போன்றவளே, ஹே கல்யாணி, காமேச்வரீ, ஹிமவானுடைய புண்ணியத்தினுல் பிறந்தவளே, மேனகையின் புத்திரியே, எனக்குப் பிராணனைவிட பிரியமாயிருக்கிற பார்வதியே, தாமரைப்போல் மிருதுவாயிருப்பவையும், ஜண் ஜண் என்று ஒலிக்கும் சலங்கையின் அழகான சப்தத்துடன்கூடின உன் பாதங்களை எனக்குக் காட்டு. நான் அதில் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

[தனக்குத் தாய், தகப்பன் கிடையாது என்று எடுத்துக் காட்டின அம்பிகைக்கு மாதாபிதாக்கள் இருக்கிறுர்கள் என்ற வைலக்ஷண்யத்தை பகவான் எடுத்துக்காட்டுகிறுர்.] (2)

आर्ये विष्णुसहोदरि त्रिभुवनाधीशे नगेशात्मजे
सर्वाभीष्टफलप्रदौ सरसिजश्रीगर्वसर्वङ्कषौ ।
मा भैष्टेति शिवे समस्तजगतां न्यस्तौ पुरस्ताच्छुभौ
हस्तौ दर्शय विस्तरेण कलये भद्रे हरिद्रार्पणम् ॥ ३ ॥

ஆர்யே விஷ்ணு ஸஹோதரி த்ரிபுவநாதீசே
நகேசாத்மஜே
ஸர்வாபீஷ்ட பலப்ரதௌ ஸரஸிஜ ஸ்ரீகர்வ ஸர்வங்கஷௌ |
மா பைஷ்டேதி சிவே ஸமஸ்த ஜகதாம் ந்யஸ்தௌ
புரஸ்தாத் சுபௌ
ஹஸ்தௌ தர்சய விஸ்தரேண கலயே பத்ரே
ஹரித்ரார்ப்பணம் ||

பெருந்தன்மை உள்ளவளே, விஷ்ணுவின் ஸோதரியே, மூவுலகிற்கும் ஈசுவரியே, பர்வதராஜன் புத்திரியே, ஹே சிவே, மங்களஸ்வரூபிணியே, ஸமஸ்த ஜகத்தையும் பார்த்து பயப்படாதே என்று முன் நீட்டிக்காட்டும் உன்னுடைய சுபமான கைகளைக்காட்டு. அவைகள் விரும்பிய எல்லா பலன்களையும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொடுப்பவை. பத்மத்தின் சோபைக்கு ஏற்பட்ட கர்வத்தை அடியோடு போக்கக்கூடியவைகள். நான் அவைகளில் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்.

[தனக்கு சகோதரர் இல்லை என்றிருந்தபோதிலும் அம்பிகைக்காவது தமையன் இருப்பதை இந்த சுலோகத்திலும் குறிப்பிடுகிருர்.] (3)

मन्नाथे मम जीवितेश्वरि मदाधारे मदुद्धारके
भ्राजद्दिव्यतटिल्लतासमुदयश्रीमन्मनोज्ञाङ्गके ।
राकापूर्णसुधानिधिप्रियसखं नित्यप्रसन्नं मुखं
प्राणप्रेयसि पार्वति प्रदिश मे कुर्यां हरिद्रार्पणम् ॥ ४ ॥

மந்நாதே மம ஜீவிதேச்வரி மதாதாரே மதுத்தாரகே
ப்ராஜத் திவ்ய தடில்லதா ஸமுதய ஸ்ரீமன்
மனோக்ஞாங்ககே ।
ராகாபூர்ண ஸுதாநிதி ப்ரிய ஸகம் நித்ய ப்ரஸந்நம் முகம்
ப்ராண ப்ரேயஸி பார்வதி ப்ரதிச மே குர்யாம்
ஹரித்ரார்ப்பணம் ॥

என்னை நாதனுகக்கொண்டவளே, என் ப்ராணேச்வரியே, எனக்கு ஆதாரமாயிருப்பவளே, என்னை தரிப்பவளே, ஜ்வலிக்கும் அழகான மின்னல்கொடிக் கூட்டத்தின் சோபையுடன் கூடியதும் அழகியதுமான அங்கங்களோடு கூடியவளே, ப்ராணனைவிடப் பிரியமான ஹே பார்வதி, பூர்ணிமா சந்திரனுக்கு ஸமானமான எப்பொழுதும் பிரஸன்னமாயுள்ள உன் முகத்தைக் காட்டு. நான் ஹரித்ரார்ப்பணம் செய்கிறேன்,

[தன் முகத்தைக் கோடி சூர்யப்ரகாசமாக வர்ணித்த அம்பிகையின் முகம் மிகவும் ஆஹ்லாதகரமாகப் பூர்ணிமா சந்திரன்போல் பிரகாசிக்கிறதென்று குறிப்பிடுகிருர்.] (4)

राजन्मन्थरराजहंसगमने राकेन्दुबिम्बानने
राजीवाक्षि गिरा निराकृतशुके वाराशिदारानुजे ।
कण्ठं दर्शय कम्बुकण्ठि गिरिजे कस्तूरिकाकुङ्कुम-
श्रीगन्धैः पटवाससुष्टिमभितो लिम्पाम्यहं सुन्दरि ॥ ५ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராஜன் மந்தர ராஜஹம்ஸ கமனே ராகேந்து பிம்பானனே
ராஜீவாக்ஷி கிரா நிராக்ருத ஸுகே ஹாராம்ஸி தாராநுஜே ।
கண்டம் தர்ஸய கம்பு கண்டி கிரிஜே கஸ்தூரிகா குங்கும
ஸ்ரீகந்தை: படவாஸ முஷ்டிமபிதோ லிம்பாம்யஹம்
ஸுந்தரி ॥

அழகாக, மெதுவாக ராஜஹம்ஸம்போல் நடப்பவளே, பூர்ண சந்திரபிம்பம் போன்ற முகமுள்ளவளே, தாமரை இதழ் போன்ற கண்களுள்ளவளே, பேச்சால் கிளியை வென்றவளே, ஸமுத்திர ராஜனின் பத்னியான கங்கையின் தங்கையே, பர்வதராஜனின் குமாரியே, சங்கம் போன்ற கழுத்தை உடையவளே, அழகியவளே உன் கழுத்தைக் காட்டு கஸ்தூரி, குங்குமப்பூ, சந்தனம் இவைகள் சேர்ந்த வாஸனை திரவ்யத்தைக் கழுத்தின் நான்குபுறமும் பூசுகிறேன்.

[இந்த சுலோகத்தில் காலகூட விஷத்தை விழுங்கினதால் ஏற்பட்ட கருப்பு வர்ணம் தன் கழுத்தில் இருந்தபோதிலும் எவ்விதக் களங்கமுமில்லாமல் சுத்த சங்கம் போன்றுள்ள கழுத்துள்ளவள் அம்பிகை என்பதை பகவான் காட்டுகிறுர்.]

बाले बालमृणालकोमलभुजे बिम्बाधरे सुन्दरि
भ्राजद्दाडिमबीजराजिरदने भृङ्गालके भामिनि ।
चञ्चच्चन्द्रकलोज्ज्वलं च निटिलं देहि प्रिये कुङ्कुमैः
उद्यद्भास्वरभानुमण्डलनिभं कुर्यामहं चित्रकम् ॥ ६ ॥

பாலே பால ம்ருணாள கோமள புஜே பிம்பாதரே ஸுந்தரி
ப்ராஜத் தாடிம பீஜ ராஜி ரதனே ப்ருங்காளகே பாமினி ।
சஞ்சச்சந்த்ர கலோஜ்வலம் ச நிடிலம் தேஹி ப்ரியே
குங்குமை:
உத்யத்பாஸ்வர பானு மண்டல நிபம் குர்யாமஹம்
சித்ரகம் ॥

ஹே பாலே! இளம் தாமரைத் தண்டுபோல் மிருதுவான புஜத்தோடு கூடினவளே, கோவைப்பழம்போன்ற உதட்டோடு கூடினவளே, ஹே சுந்தரி, நன்கு பிரகாசிக்கிற மாதுளமுத்து வரிசைபோலுள்ள தந்தங்களுடன் கூடினவளே, வண்டுபோல் கருத்த கேசத்தோடு கூடினவளே, பிரகாசிக்கிறவளே, அழகா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யிருக்கிற சந்திர கலையுடன் பிரகாசிக்கும் உன் நெற்றியைக் காட்டு. ஹே ப்ரியே, அதில் உதய காலத்தில் பிரகாசிக்கும் சூரியமண்டலம்போல் குங்குமத்தினுல் திலகமிடுகிறேன். (6)

मन्त्रान् वैदिकतान्त्रिकानपि वदन्नाशीर्वचोगुम्भिता-
नाशासान इतोऽपि भाग्यकलितान् भोगांश्च भोक्तुं त्वयि ।
मुक्ताविद्रुमचित्ररत्नरचितां माणिक्यपात्रे स्थितां
आरार्तिं कलये विलोकय शिवे भूयोऽस्तु ते मङ्गलम् ॥

மந்த்ரான் வைதிக தாந்த்ரிகானபி
வதன்னாஶீர்வசோ கும்பிதான்
ஆஶாஸாந இதோऽபி பாக்ய கலிதான் போகாம்ச்ச
போக்தும் த்வயி ।
முக்தா வித்ரும சித்ர ரத்ந ரசிதாம் மாணிக்ய பாத்ரே
ஸ்திதாம்
ஆரார்திம் கலயே விலோகய ஶிவே பூயோऽஸ்து தே
மங்களம் ॥

ஹே சிவே, ஆசீர்வாத வசனங்கள் நிரம்பிய வைதிக தாந்த்ரிக மந்திரங்களைச் சொல்லி, இப்பொழுதுள்ளதைவிட அதிகமான சிரேயஸ்ஸை விரும்பி மஹா பாக்கியங்களினுல் ஏற்படும் போகங்களை உன் மூலமாய் அனுபவிக்க உத்தேசித்து மாணிக்கப் பாத்திரத்திலுள்ள முத்து, பவழம், பலவித ரத்னங்களினுல் ஏற்படுத்தியிருக்கும் ஆரார்த்தியைச் செய்கிறேன். நிமிர்ந்து பார். உனக்கு இன்னும் மேன்மேலும் மங்களம் ஏற்படட்டும். (7)

धर्मादावनुकूलनी मम सदा भूत्वा मदाराधिनी
मद्वाक्यैकरता मम प्रियकरी न्यस्तात्मतन्त्रा मयि ।
भुञ्जाना विभवांश्चतुर्मुखमुखान् पुत्रान् सृजन्ती शिवे
भूयाः कल्पशतं मया च सुखिनी मूर्ध्न्यक्षताः सन्तु ते ॥

தர்மா தாவனுகூலநீ மம ஸதா பூத்வா மதாராதினீ
மத்வாக்யைக ரதா மம ப்ரியகரீ ந்யஸ்தாத்ம தந்த்ரா மயி ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புஞ்ஞாநா விபவாம்ஶ்சதுர்முக முகான் புத்ரான்
ஸ்ருஜந்தீ ஶிவே
பூயா: கல்பஶதம் மயா ச ஸுகினீ மூர்த்ன்யக்ஷதா:
ஸந்து தே ||

ஹே சிவே, தர்மாசரணம் முதலானதுகளில் நீ எனக்கு எப்பொழுதும் அனுகூலமாயிருந்து, என்னை ஆராதித்து, என் வாக்கியத்திலேயே ஈடுபட்டு, எனக்குப் பிரியம் செய்துகொண்டு உன் பொறுப்பை எல்லாம் என்னிடத்திலே வைத்து, ஸகல விதமான விபவங்களையும் அனுபவித்துக்கொண்டு, ப்ரஹ்மா முதலான புத்திரர்களை உண்டுபண்ணிக்கொண்டு நூற்றுக் கணக்கான கல்பகாலம் நீ என்னுடன் ஸுகித்து இருந்து வருவாயாகவும். இவ்வக்ஷதைகள் உன் சிரஸில் இருக்கட்டும்.

[இவ்விதமாக முதல் சுலோகத்தினால் அம்பிகையை நிந்தா ஸ்துதி ருபமாக அழைத்து, இரண்டாவது சுலோகத்தினால் பாதங்களிலும், மூன்றாவது சுலோகத்தினால் கைகளிலும், நான்காவது சுலோகத்தினால் முகத்திலும் மஞ்சளிட்டு, ஐந்தாவது சுலோகத்தினால் கழுத்தில் சந்தனம் பூசி, ஆறாவது சுலோகத்தினால் நெற்றியில் திலகமிடுகிறார். அம்பிகை பகவானைப் பார்தது பிரார்த்தித்ததற்கிணங்க, அவளை ஆசீர்வதித்து, ஏழாவது சுலோகத்தினால் ஆரார்த்தி காட்டி, எட்டாவது சுலோகத்தினால் சிரஸில் மங்களாக்ஷதை போட்டு அனுக்ரஹிக்கிறார்.] (8)

மேற்கொண்டு பின்னிட்டு சொல்லப்பட்ட ஸந்தான உத்ஸவத்தில் சொல்லப்படும் ஸந்தானகல்பவல்லி என்ற சுலோகங்களின் கருத்து.

அஸுரர்கள் துஷ்ட மிருகங்கள் உருவத்துடன் ஜனங்களுக்கு ஹிம்சை செய்துவருவதால் அவர்களை வேட்டையாடி ஸம்ஹாரம் செய்துவிட்டு பகவான் தன்னுடைய ஸ்தானத்திற்குத் திரும்பி வரும்போது வெகுநாழிகை ஆகி விடுகிறது. அப்பொழுது "வாசலில் வந்திருப்பது யார்" என்று உள்ளே இருக்கும் அம்பிகை தன்னுடைய ஸகி மூலமாகக் கேட்டு அனுப்புகிறாள். அப்பொழுது பரமசிவன் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அம்பிகை வேண்டுமென்றே விளையாட்டாக வேறு அர்த்தம் செய்துகொண்டு பகவானை உள்ளே வருவதற்கு அனுமதிக்காமல் இருந்துவருகிறாள். அப்பொழுது ஈசுவரன் அவளை ஸமாதானப்படுத்தி உள்ளே போகிறார். இந்த விஷயத்தை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒரு உத்ஸவமாகக் கொண்டாடுகிறார்கள். இவ்வுத்ஸவம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று தெரியவில்லை. பகவானும் அம்பிகையும் சொல்லும் வார்த்தைகளை சிருங்ககிரி பீடத்தில் 25வது ஆசார்யராக கி. பி. 1623 முதல் 1633 வரை பீடாதிபத்யம் செய்துவந்த ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த பாரதீ ஸ்வாமிகள் (I) அவர்கள் சுலோக ரூபமாக அமைத்து இருக்கிறார்கள். அம்மஹான் ஸ்ரீ ராமசந்திர மஹோதயம், மீனாக்ஷி சதகம், ராம புஜங்கம், குரு சதகம் முதலான அனேக கிரந்தங்களை எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது இங்கு மேலே கண்ட உத்ஸவ விஷயமாக ஸந்தான (संधान) சுலோகங்களை மாத்திரம் வெளியிடுகிறோம். பிரிந்திருந்த பகவானையும் அம்பிகையையும் சேரும்படி செய்கிற உத்ஸவமாயிருப்பதால் இந்த உத்ஸவத்திற்கு ஸந்தானோத்ஸவம் (संधानोत्सवम्) என்று பெயர். அதையனுஸரித்து இந்த சுலோகங்களுக்கும் ஸந்தான கல்பவல்லி (संधानकल्पवल्ली) என்று பெயரிட்டிருக்கிறார்கள். சுலோகங்கள் லளிதமாக இருந்தபோதிலும் ச்லேஷையைப் பிரதானமாகக் கொண்டிருப்பதால் குஸுமா (कुसुमा) என்ற ஒரு டீகையும் ஏற்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்தே இங்கு சுலோகார்த்தம் கொடுக்கப்படுகிறது.

श्रीसच्चिदानन्दयतीन्द्रनामा करोमि संधानमिदं सुवृत्तम् ।
याथोपलब्धं प्रसमीक्ष्य सन्तः तुष्यन्तु कामेश्वरयोर्मनोज्ञम् ॥

ஸ்ரீ ஸச்சிதானந்த யதீந்த்ர நாமா
கரோமி ஸந்தானமிதம் ஸுவ்ருத்தம் ।
யாதோபலப்தம் ப்ரஸமீக்ஷ்ய ஸந்த:
துஷ்யந்து காமேச்வரயோர் மனோக்ஞம் ॥

"ஸ்ரீ ஸச்சிதாநந்த யதீந்திரர் என்ற பெயருள்ள நான் சோபன விருத்தாந்தமான ஸந்தானம் (संधानम्) என்ற விஷயம் எப்படி பிராசீன ஸம்பிரதாயப்படி நடந்துவந்திருக்கிறதோ, அதை நான் தெரிந்தபடி காமேசுவரருக்கும், காமேசுவரிக்கும் ஏற்பட்ட மனோஹரமான சேர்க்கையைப் பற்றிச் சொல்லுகிறேன். ஸாதுக்கள் அக்கரையோடுகூட நன்கு பார்த்து சந்தோஷத்தை அடையட்டும்".

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

श्रीमच्छृङ्गपुरीविहारमनसौ श्रीमद्भवानीमृडौ
माघे मासि शताङ्गसंभवमहोत्साहं विनिर्वर्त्य तौ ।
लीलां चक्रतुरीश्वरस्तु मृगयां गत्वा यदा ह्यभ्यगात्
द्रष्टुं कौतुकमम्बिकाऽस्य धिषणां बुद्ध्वा बभाषे सखीम् ॥

ஸ்ரீமத்ச்ருங்கபுரீ விஹார மநஸௌ ஸ்ரீமத்பவானீ ம்ருடௌ
மாகே மாஸி ஶதாங்க ஸம்பவ மஹோத்ஸாஹம்
விநிர்வர்த்ய தௌ
லீலாம் சக்ரதுரீச்வரஸ்து ம்ருகயாம் கத்வா யதா
ஹ்யப்யகாத்
த்ரஷ்டும் கௌதுகமம்பிகாஸ்ய திஷணாம் புத்வா
பபாஷே ஸகீம் ॥

"அதிசோபனமான சிருங்கபுரியில் விஹாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பரமேசுவரனும், பவானியும் மாகமாஸத்தில் ரதோத்ஸவ வைபவத்தை நடத்திவிட்டு இருவர்களும் ஓர் லீலை செய்தனர். அவர்களில் மஹேசுவரர் வேட்டையாடப் போய்விட்டுத் திரும்பிவந்த ஸமயம் அம்பிகை கொஞ்சம் விளையாட்டுப்பார்க்க வேண்டுமென்று நினைத்து அவருடைய புத்தி சாதுர்யத்தை அறிந்து ஸகியிடம் சொல்லுகிருள்"

संप्रत्यागमनं निशीथसमये कस्येति देव्येरिते
ह्याली तं समपृच्छदद्रिशरणं सोऽप्युत्तरं चाभणत् ।
मुग्धे भव्यकरः शिवाभिध इति श्रुत्वा वने संचरा-
म्यूदे गोपतिरस्मि चारय बहिः त्र्यक्षोऽस्मि वृक्षोपरि ॥

ஸம்ப்ரத்யாகமனம் நிஶீதஸமயே கஸ்யேதி தேவ்யேரிதே
ஹ்யாளீ தம் ஸமப்ருச்சதத்ரிஶரணம் ஸோऽப்யுத்தரம்
சாபணத் ।
முக்தே பவ்யகர: ஶிவாபித இதி ச்ருத்வா வநே ஸஞ்சரா-
ம்யூடே கோபதிரஸ்மி சாரய பஹி: த்ர்யக்ஷோऽஸ்மி
வ்ருக்ஷோபரி ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

"இப்பொழுது நல்ல ராத்திரி ஸமயத்தில் வந்திருப்பது யார்?" என்று தேவி ஸகியைக்கொண்டு கேட்கச்சொல்கிருள். அவ்வாறு ஸகி கேட்கவே அதற்கு மஹேசுவரர் பதில் சொல்கிருர்.

இவ்விருவர்களுக்குள் ஸகிமூலமாய் நடக்கும் ஸம்பாஷணையை ஸம்பாஷணுருபமாக எடுத்து எழுதுவதே உசிதமாகும்.

பகவான் :— நான் க்ஷேமத்தைச் செய்கிறவன்; எனக்கு 'சிவன்' என்று பெயர்.

அம்பாள் :— அப்படியானல் காட்டில் ஸஞ்சரியும்.

[மங்கள உருவாகவும், மங்களத்தைக் தருபவராகவும் இருப்பதால் சிவன் என்று பெயர். ஸம்ஸ்கிருதத்தில் 'சிவ' என்ற சொல்லுக்கு 'நரி' என்ற பொருளும் உண்டு. இதைக் கொண்டு அம்பாள் பதில் கூறுகிருள்]

பகவான் :— நான் பசுபதி.

அம்பாள் :— அப்படியானல் மாடுகளை வெளியில் ஓட்டிக் கொண்டு போய் மேய்க்கவும்.

[ஜீவர்களை பசுக்களாகவும், ஜீவர்களின் அதிபதியான ஈசுவரனை பசுபதி என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸாதாரணமாக பசுபதி என்பதற்கு பசுக்களின் யஜமானன், அதாவது இடையன் என்றும் பொருள் கூறலாம். இதைக் கொண்டு அம்பாள் பதில் கூறுகிருள்.]

பகவான் :— நான் முக்கண்ணன்.

அம்பாள் :— அப்படியானல் மரத்தின்மேல் இரும்.

[பரமசிவனுக்கு மூன்று கண்களிருப்பதால் அவர் தன்னை 'முக்கண்ணன்' என்று சொல்லிக்கொண்டார். தேங்காய்க்கும் மூன்று கண்கள் இருப்பதால் 'த்ர்யக்ஷ' என்ற சொல் தேங்காயையும் குறிக்கும். இதைக்கொண்டு 'தென்னை மரத்தின்மேல் இரும்' என்று அம்பாள் பதில் சொல்கிருள்.]

பகவான் :— நான் ஸ்ரீதரன்.

அம்பாள் :— அப்படியானல் உடனே பிருந்தாவனத்திற்குப் போகலாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

['ஸ்ரீ' என்றால் விஷத்திற்குப் பெயர். அதைக் கழுத்தில் தரிக்கிறபடியால் தன்னை 'ஸ்ரீதரன்' என்று சொல்லிக் கொண்டார். அதாவது நீலகண்டன் என்று பொருள். 'ஸ்ரீ' என்றால் லக்ஷ்மி; லக்ஷ்மியை மார்பில் வைத்துக்கொண்டிருக் கிறபடியால் மஹாவிஷ்ணுவுக்கு 'ஸ்ரீதரர்' என்ற பெயர் உலகில் ப்ரஸித்தமாயுள்ளது. இதைக்கொண்டு அம்பாள் பதில் கூறினாள்.]

பகவான்: நான் இராப்பகலாக கங்கா ஜீவனத்தை பரணம் செய்கின்றவன்.

அம்பாள்: அப்படியானால் உடனே அங்கு சென்று அவளையே ஸேவித்துக்கொண்டிரும்.

[ஜீவனம் என்ற சொல்லுக்கு ஜலம் என்று பொருள். கங்கா ஜலத்தை சிரஸ்ஸில் தரித்துக்கொண்டிருக்கிறேன். அதாவது கங்காதரன் என்று ஈசுவரன் கூறினார். ஜீவனம் என்பது வாழ்க்கையைக் குறிப்பதால் 'கங்கையின் வாழ்க்கையை எப்பொழுதும் நடத்திக்கொண்டிருக்கிறேன்' என்று அவர் சொன்னதாக வைத்துக்கொண்டு 'கங்கையின் இடமே செல்லும்' என்று அம்பாள் கூறுகிறாள்.]

பகவான்: ஹே மதிப்புக்குரியவளே, நான் அப்படிப் பட்டவனல்ல. என்னைச் சிறந்த காபாலிகன் என்று தெரிந்து கொள்.

அம்பாள்: அப்படியானால் ஒரு பெரிய பட்டணத்திற்குள் சென்று பிரதிதினம் அடிக்கடி பிச்சையெடுக்கலாம்.

[பிரஹ்மாவின் கபாலத்தைக் கையில் ஏந்தியிருக்கிற படியால் பரமசிவனைக் கபாலி என்றும், காபாலிகன் என்றும் சொல்வதுண்டு. கையில் ஓட்டை வைத்துக்கொண்டு பிச்சை கேட்பவனையும் காபாலிகன் என்று கூறலாம். இந்த அர்த்தத்தை வைத்துக்கொண்டு நகரம் சென்று பிச்சை எடுக்கும்படி அம்பாள் கூறுகிறாள்.]

பகவான்: நான் ஸுமனஸ்களுக்கு ஆச்ரயமாக இருக்கிறவன். பாம்புபோல் வளைந்து நீண்ட ஜடையுள்ள வளே, சீக்கிரம் என்னை வந்து அடைவாயாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அம்பாள்: தாங்கள் சிறந்த மரமாக இருப்பதால் மிக நெருக்கமாக உள்ள உத்யானவனத்தில் வஸிப்பது நல்லது.

[ஸுமனஸ் என்ற பதம் தேவர்களைக் குறிக்கும். தேவர்களுக்கு நான ஆச்ரயமாக இருக்கிறவன். எல்லா தேவர்களும் சரணமடையததகுந்தவனுக நான இருக்கிறேன் என்று பகவான் சொன்னுர். ஸுமனஸ என்ற பததகிற்கு புஷ்பம் என்ற அர்த்தமும் உண்டு. புஷ்பங்களுக்கு ஆச்ரயம் என்ருல் நன்கு புஷ்பிதத மரம எனறு பொருள். இதைக்கொண்டு அம்பாள் பதில் கூறுகிருள்.]

பகவான்: நான் அப்படிப்பட்டவனில்லை. ஒளியுடன் விளங்கிக்கொண்டிருக்கும் திவிசரர்களில் நானே சிறந்தவன்.

அம்பாள்: தாங்கள் பக்ஷிராஜனுன கருடனு? உல்லாஸமாக ஆகாசத்தில் ஸஞ்சரிக்கலாம்.

['திவிசர' என்ற பதத்திற்கு ஸ்வர்க்கத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்கள் என்ற அர்த்தத்தில் பகவான் கூறினுர். ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் பக்ஷி என்ற பொருளில் அம்பாள் பதில் கூறினுள்.]

பகவான் :— அழகு பொருந்தியவளே, த்ரிதசர்களுக்குள் சிரேஷ்டன் என்று என்னை அறிந்துகொள்.

அம்பாள்: அப்படியானுல் நன்கு மனுஷ்யத் தன்மையை அடையும்.

['த்ரிதச' என்ற பதம் சாதாரணமாக மூன்று அவஸ்தைகளுடன்கூடிய தேவர்களைக் குறிக்கும். ஸாமான்யமாக எல்லாப் பதார்த்தங்களுக்குமே பிறப்பு, இருப்பு, வளர்தல், மாறுதல், குறைவு, மறைவு என்ற ஆறு விகாரங்கள் உண்டு. ஆனுல் தேவர்களுக்கு மட்டும் பிறப்பு, இருப்பு, மறைவு என்ற மூன்று அவஸ்தைகள்தான். தேவலோகத்தில் பிறக்கும் பொழுதே இருபததைந்து வயதுள்ள வாலிபப் பருவத்துடன் தோனறி, மறையும் வரையில் மாருமல் ஒரேமாதிரியாக தேவர்கள் இருப்பதால், அவர்களுக்கு விருத்தியடைவது, மாறுதல், குறைவு என்ற மூன்று தசைகளும் கிடையாது. ஆகவே மூன்று தசைகள் மட்டுமே தேவர்களுக்கு இருப்பதால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவர்களை 'த்ரிதசர்கள்' என்று கூறுவார்கள். இந்த அர்த்தத்தில் பகவான் கூறினார். மனுஷ்யர்களுக்கும் பால்யம், யௌவனம், வார்த்தகம் என்றோ, அல்லது ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்றோ மூன்று தசைகளிருப்பதால் அவர்களையும் த்ரிதசர்கள் என்று கூறலாம். இதை மனதில் கொண்டு அம்பாள் கூறுகிறாள்.]

பகவான்: உன்னுடைய ஸமயோசித புத்தித்திறமை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் நான் பர்ஹிர்முகர்களுக்குள் சிறந்தவன்.

அம்பாள்: அப்படியானால் புல்லைச் சாப்பிடும்.

[தன்னை தேவசிரேஷ்டன் என்று காட்டுவதற்காக முதலில் 'ஸுமனஸ்' என்ற பதத்தாலும், பிறகு 'திவிசர'பதத்தாலும், பின்னால் 'த்ரிதச' பதத்தாலும் தேவர்களைக் குறிப்பிட்டார். இம்மூன்று பதங்களுக்கும் வெவ்வேறு அர்த்தத்தை மனதில் கொண்டு அம்பாள் பதில் கூறிவிட்டாள். கடைசியில் பர்ஹிர்முக (बर्हिर्मुख) பதத்தால் தேவர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்குள் சிறந்தவன் என்று தன்னைக் கூறிக்கொண்டார். பர்ஹி: (बर्हिः) என்றால் அக்னி. அக்னியை முகமாகக் கொண்டிருப்பதால் தேவர்களுக்கு பர்ஹிர்முகர் (बर्हिर्मुखाः) என்று பெயர். எல்லா தேவதைகளுக்கும் ஆஹுதிகளை அக்னி மூலமாகத்தான் கொடுக்கவேண்டும். ஆதலால் தேவதைகள் ஆஹுதிகளைப் பெறுவதற்கு அக்னிதான் முகமாக ஆகிறது. ஆதலால் அவர்கள் பர்ஹிர்முகர்கள். அவர்களில் சிறந்தவன் ஈசுவரன். பர்ஹி: என்ற பதத்துக்குப் புல் என்ற பொருளும் உண்டு. புல்லை வாயில் வைத்துக்கொண்டிருப்பதால் பசுக்களையும் பர்ஹிர்முகபதத்தால் கூறலாம். இந்தப் பொருளை மனதில்கொண்டு 'புல்லைச் சாப்பிடும்' என்று அம்பாள் கூறுகிறாள்.]

धीभृत् त्वद्य सदेशमाप सहसा गच्छाशु वृन्दावनं
गङ्गाजीवनभृत् त्वहर्निशमहं सेवां विधेह्यञ्जसा ।
भो भो मानिनि तद्विधो न परमं कापालिकं विद्धि मां
अम्भोजानन पत्तनं विश मुहुर्भिक्षामट प्रत्यहम् ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

तथा सुमनसां श्रयं भज भुजङ्गवेणि द्रुतं
महानिबिडनिष्कुटे वसतु वृक्षवर्यो भवान् ।
लसद्विचरर्षभं भृशमवेहि नाहं तथा
भवेयमिति चेत् पुनः पतगराड् भवोल्लासगः ॥

त्रिदशाग्र्यमवेहि भामिनीमं सुदृढं तर्हि मनुष्यभावमेहि ।
भवतु प्रतिभा तथापि बर्हिर्मुखवर्यः किल चेदथाद्धि घासम् ॥

ஶ்ரீத்ருத் த்வத்ய ஸதேஶமாப ஸஹஸா கச்சாங்க
ப்ருந்தாவனம்
கங்காஜீவனப்ருத் த்வஹர்நிஶமஹம் ஸேவாம்
விதேஹ்யஞ்ஜஸா ।
போ போ மானினி தத்விதோ ந பரமம் காபாலிகம்
வித்தி மாம்
அம்போஜானன பத்தனம் விஶமுஹுர் பிக்ஷாமட
ப்ரத்யஹம் ॥

ததா ஸுமநஸாம் ச்ரயம் பஜ புஜங்கவேணி த்ருதம்
மஹாநிபிடநிஷ்குடே வஸது வ்ருக்ஷவர்யோ பவான் ।
வஸத்திவிசரர்ஷபம் ப்ருஶமவேஹி நாஹம் ததா
பவேயமிதி சேத் புநः பதகராட் பவோல்லாஸகः ॥

த்ரிதஶாக்ர்யமவேஹி பாமிநீமம்
ஸுத்ருடம் தர்ஹி மனுஷ்யபாவமேஹி ।
பவது ப்ரதிபா ததாபி பர்ஹிர்-
முகவர்யः கில சேததாத்தி காஸம் ॥

இவ்விதம் பகவான் தன்னைப்பற்றி எவ்விதம் சொல்லிக்கொண்டாலும் அதற்கு வேறு அர்த்தத்தைக் கல்பித்துக் கொண்டு தன்னை அறிந்துகொள்ளாதவள்போல் பேசும் அம்பிகையை ஸமாதானப்படுத்தினாலொழிய அவள் இசைந்து வரமாட்டாளென்று தெரிந்து மறுபடியும் சொல்ல ஆரம்பிக்கிறார். தன்னிடத்தில் அம்பிகைக்கு ஏற்பட்டுள்ள கோபத்தை சமனம் செய்யவேண்டுமானால் அந்தக் கோபத்திற்கு ஒரு வழி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விடவேண்டியது அவசியமல்லவா! "என்னை உன்னுடைய கடாக்ஷத்தினால் தாக்கி எனக்கு சிக்ஷை ஏற்படுத்து. ஆனால் அந்தக் கண்பார்வை கருணையோடு கூடி இருக்கவேண்டும். எனக்கு சிக்ஷையாக என்னைக் கட்டிப்போடு. ஆனால் அவ்விதம் கட்டுவது அனுராகத்தினால் ஏற்பட்ட ஆலிங்கன மாக இருக்கவேண்டும். இவ்விதம் எனக்கு தண்டனை விதித்த பிற்பாடு ஹே நீண்ட கண்கள் உள்ளவளே! மனோஹரமான க்ரீடாகிருஹத்திற்குப்போ" என்று சொல்லுகிறார்.

इत्थं निशम्य भगवान् त्यज रोषमत्र
शिक्षां विधेहि करुणाभरितैः कटाक्षैः ।
प्रेम्णाऽस्य बन्धनविधिं परिकल्प्य कान्ते
क्रीडागृहं विश मनोहरमायताक्षि ॥ ७ ॥

இத்தம் நிஶம்ய பகவான் த்யஜ ரோஷமத்ர
ஶிக்ஷாம் விதேஹி கருணாபரிதை: கடாக்ஷை: ।
ப்ரேம்ணா஽ஸ்ய பந்தனவிதிம் பரிகல்ப்ய காந்தே
க்ரீடாக்ருஹம் விஶ மநோஹரமாயதாக்ஷி ॥

இதைக்கேட்டுச் சிரித்துக்கொண்டு அம்பாள் மிகுந்த ஆவலுடன் "அப்படியானால் நீங்கள் யார் என்பதற்கு எனக்கு ஒரு அடையாளம் காட்டவேண்டும்" என்கிறாள். அதைக் கேட்டுச் சந்திரசேகர் தன் மோதிரத்தைக் கொடுக்கிறார். அதைப் பார்த்து அவள் மிகவும் அன்புடன் வீட்டிற்குள் போகலாம் என்று சொல்கிறாள். அதைக் கேட்டு பகவான் அவளுடன் சேர்ந்து வீட்டிற்குள் செல்லுகிறார்.

देवी प्रहस्य कुतुकात् मम देह्यभिज्ञां
इत्यब्रवीत् अथ कलानिधिशेखरोऽसौ ।
हस्तोर्मिकः सरुचि सा गृहमाविशेति
प्रत्यब्रवीद्गुरुतया गृहमाप तावत् ॥ ८ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவீ ப்ரஹஸ்ய குதுகாத் மம தேஹ்யபிஜ்ஞாம்
இத்யப்ரவீத் அத கலாநிதிமௌகரோசௌ।
தத்தோர்மிக: ஸருசி ஸா க்ருஹமாவிமேதி
ப்ரத்யப்ரவீத் குருதயா க்ருஹமாப தாவத்॥

இவ்விதமாக விளையாட்டாக பகவானும், அம்பிகையும் வாக்குவாதம் செய்துகொண்டதை சுலோக ரூபமாக எழுதி பூர்த்தி செய்த கிரந்தகர்த்தாவான ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஸச்சிதானந்த பாரதீஸ்வாமிகள் அவர்கள் இந்த ஸ்துதி தனக்கு மிகுந்த கீர்த்தியைக் கொடுக்கட்டும் என்று பிரார்த்திக்கிருர்.

यथातथकथा यथा विरचिता पुरा सादरं
नतामरवरा तथा निगदिता मया श्रीमता ।
तनोतु मम सा कथा मुनिवरैः समाराधिता
महीसुरनिषेविता विततकीर्तिपारम्परीम् ॥ ९ ॥

யதாததகதா யதா விரசிதா புரா ஸாதரம்
நதாமரவரா ததா நிகதிதா மயா ஸ்ரீமதா।
தநோது மம ஸா கதா முநிவரை: ஸமாராதிதா
மஹீஸுரநிஷேவிதா விததகீர்த்திபாரம்பரீம்॥

"முன்னுல் எவ்விதம் இந்தக் கதை நடந்ததோ அப்படியே மிக்க ஆதரவோடு இப்பொழுது இதில் எழுதப்பட்டிருக்கிறது. தேவ சிரேஷ்டர்களினுல் நமஸ்காரம் செய்யப்பட்டு முனிவர் களினுல் ஆராதிக்கப்பட்டு பிராஹ்மணர்களினுல் நன்கு ஸேவிக்கப்பட்டு வந்திருக்கும் இந்தக் கதையானது எனக்கு விஸ்தாரமான கீர்த்தி பரம்பரையை அளிக்கட்டும்" என்கிருர்.

அம்பிகையினுடைய விளையாட்டு வார்த்தைகளை, தான் அனுவாதனம் செய்ததினுல் அபசாரம் ஏற்பட்டிருக்குமோ என்று பயந்து பகவானிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இதை ஸ்மரிக்கிறவர்களுக்கு அருள் செய்யும்படி வேண்டுகிருர்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मृगाङ्काङ्क नित्यं क्षमस्वापराधं मदीयं वदान्य त्वदन्यं न याचे ।
स्मरन्ति त्वदीयां नुतिं ये मनुष्याः भवन्तु प्रसादात् सदा लोकपूज्याः ॥

ம்ருகாங்காங்க நித்யம் க்ஷமஸ்வாபராதம்
மதீயம் வதான்ய த்வதன்யம் ந யாசே ।
ஸ்மரந்தி த்வதீயாம் நுதிம் யே மனுஷ்யாः
பவந்து ப்ரஸாதாத் ஸதா லோகபூஜ்யாः ॥

"ஹே சந்திரசூடா, என்னுடைய அபராதத்தை எப்பொழுதும் மன்னிக்கவேண்டும். உதார மனமுள்ளவரே! உம்மைத்தவிர வேறு யாரிடமும் நான் யாசிக்கமாட்டேன். உம்முடைய ஸ்தோத்திரமாக இருக்கிற இதை எந்த மனுஷ்யர்கள் ஸ்மரிக்கிறார்களோ, அவர்கள் உம்முடைய அனுக்ரஹத்தினால் எப்பொழுதும் உலகத்தில் பூஜிக்கத்தகுந்தவர்களாக இருக்கட்டும்."

கடைசியாக இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பவர்கள், கேட்கிறவர்கள், எழுதுகிறவர்கள் எல்லோருக்கும் எல்லா சிரேயஸ்ஸுகளும் ஏற்படும் என்று கூறுகிறார்.

पठन्ति शृण्वन्ति लिखन्ति ये वै मदीयसन्धानसुकल्पवल्लीम् ।
भवन्तु ते शङ्कर किङ्करेषु प्रकृष्टकामाः खलु किं विचित्रम् ॥ ११ ॥

படந்தி ச்ருண்வந்தி லிகந்தி யே வை
மதீயஸந்தான ஸுகல்பவல்லீம் ।
பவந்து தே சங்கர கிங்கரேஷு
ப்ரக்ருஷ்டகாமாः கலு கிம் விசித்ரம் ॥

"எவர்கள் நான் எழுதிய இந்த ஸந்தானகல்பவல்லியை வாசிக்கிறார்களோ, காதால் கேட்கிறார்களோ, எழுதுகிறார்களோ அவர்கள் பகவானுடைய சேவகர்களுக்குள் ஆசைப்படவேண்டிய விஷயங்களில் மிகவும் உன்னதமானதை (மோக்ஷத்தை) அடைந்தவர்களாக ஆவார்கள் என்பது ஸித்தம். இதில் என்ன ஆச்சர்யம்!" என்று முடிக்கிறார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த இரண்டு உத்ஸவங்களும் எந்தக் காலத்தில் ஆரம்ப மானவை என்று சொல்லமுடியவில்லை. இரண்டு உத்ஸவங் களும் 16-வது நூற்றுண்டுக்கு முன்பிருந்தே நடந்து வந்து இருப்பதாகத் தெரிகிறது. ஆனல் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு உத்ஸவ சுலோகங்கள் சிருங்கேரி சாரதா பீடத்தின் 25-வது பீடாதிபதிகளாக அமர்ந்த ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதீ (I) அவர்களால் இயற்றப்பட்டவை என்பதற்கு சிருங்கேரி மடத்தில் உள்ள புத்தகப் பாண்டாரத்தில் சான்றுகள் இருக் கின்றன,

மேற்சொன்ன 25-வது பீடாதிபதிகள் பல கிரந்தங்களை இயற்றியிருக்கிருர். அத்துடன் 1 முதல் 25 வரை உள்ள பீடாதிபதிகளைப்பற்றித் தொடர்ச்சியாக பண்டிட் காசி லக்ஷ்மண சாஸ்திரிகளைக்கொண்டு குருவம்ச காவியம் என்ற சம்ஸ்கிருத கிரந்தத்தையும் எழுதச் செய்திருக்கிருர். இந்த காவியத்திலும் 25-வது பீடாதிபதிகள் இயற்றிய மேலே சொல்லப்பட்ட கல்யாணம், நலுங்கு சுலோகங்கள் இயற்றப் பட்டதைக் குறித்திருப்பது காணலாம். இந்த காவியத்தில் மலஹானிகரேசுவரருக்கு மல்லிகார்ஜுனஸ்வாமி என்ற பெயர் உண்டு என்று தெரிகிறது.

இந்தக் கோவிலைப்பற்றி மற்ருெரு விசேஷம் உண்டு. தேசத்தில் மழையே பெய்யாமல் இருந்தால் இங்குள்ள சிவலிங்கத்துக்கு விசேஷமாக ருத்ராபிஷேகம் செய்தால் சீக்கிரம் மழை பெய்யும். அதேபோல் மழை அதிகமாகப் பெய்து ஜனங்கள் கஷ்டப்பட்டால் இதே மூர்த்திக்கு பிரார்த்தனை செய்துகொண்டு விசேஷ அபிஷேகம் செய்தால் அந்த பெருமழையும் நின்றுவிடும்.

4

[சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் 33-வது பீடாதிபதியாக அமர்ந்த ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட எல்லா சுலோகங்களையும் ஸ்ரீவாணி விலாஸ் அச்சகத்தில் ஸ்ரீ T. K. பாலசுப்பிரமணிய அய்யரால் அச்சிடப்பட்டு 'பக்தி ஸுதாதரங்கிணி' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இதிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவை பின் வருபவையாகும்.]

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தியான சுலோகங்கள்

எந்த ஈசுவர ஸந்நிதிக்குப் போனாலும், அந்த மூர்த்திக்கு உகந்த தியான சுலோகத்தைச் சொல்லி நமஸ்கரித்தால் அந்த மூர்த்தியின் கடாக்ஷம் கிடைக்கும் என்பது நம் சான்றோர் களின் வாக்கு. சிருங்கேரியில் ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் ஆலயத்தில் பல மூர்த்திகள் உண்டு. அந்தந்த மூர்த்தியின் முன்பு தியானம் செய்யும்போது நாம் சொல்ல வேண்டிய சுலோகங்களை கீழே காணலாம்.

ஸ்ரீ மலஹானிகரேசுவரர்

नमो गौरीशाय स्फुटितधवलांगाय च नमः
नमो लोकेशाय स्तुतविबुधलोकाय च नमः ।
नमः श्रीकण्ठाय क्षपितपुरदैत्याय च नमो
नमः फालाक्षाय स्मरमदविनाशाय च नमः ॥

நமோ கௌரீசாய ஸ்புடித தவளாங்காய ச நம:
நமோ லோகேசாய ஸ்துதிவிபுத லோகாய ச நம: ।
நம: ஸ்ரீகண்டாய க்ஷபிதபுரதைத்யாய ச நமோ
நம: பாலாக்ஷாய ஸ்மரமத விநாசாய ச நம: ॥

பவானி அம்மன்

शरत्पूर्णचन्द्रप्रभापूर्णबिम्बाधरस्मेरवक्त्रारविन्दां सुशान्ताम् ।
सुरत्नावलीहारताटङ्कशोभां महासुप्रसन्नां भजे श्रीभवानीम् ॥

சரத்பூர்ண சந்த்ர ப்ரபாபூர்ண பிம்பாதரஸ்மேர
வக்த்ரார விந்தாம் ஸுசாந்தாம் ।
ஸுரத்னவளீ ஹார தாடங்கசோபாம் மகாஸுப்ர
ஸந்நாம் பஜே ஸ்ரீ பவானீம் ॥

ஸ்தம்பகணபதி

वन्दारुजनमन्दारं इन्द्रचूडतनूभवम् ।
सिन्धूर बन्धुरमुखं वन्दे स्तम्बेरमाननम् ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வந்தாரு ஜனமந்தாரம் இந்துசூடதனுபவம் ।
ஸிந்தூர பந்துர முகம் வந்தே ஸ்தம்போ மானனம் ॥

துர்க்காதேவி

दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः
स्वस्थैः स्मृता मतिमतीव शुभां ददासि ।
दारिद्र्य दुःख भयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता ॥

துர்க்கே ஸ்மிருதா ஹரஸி பீதிமசேஷஜந்தோ:
ஸ்வஸ்தைః ஸ்மிருதா மதிமதீவ சுபாம் ததாஸி ।
தாரித்ரய துக்க பயஹாரிணீ கா த்வ தன்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா ॥
(துர்க்கா ஸப்தசதி V-17)

காலிகாம்பா

कालि कपालिनि शूलिनि भैरवी मातंगि पञ्चमि त्रिपुरे ।
वाग्देवि विन्ध्यवासिनि बाले भुवनेशि पालय चिरं माम् ॥

காளி காபாலினி சூலினி பைரவி மாதங்கி பஞ்சமி த்ரிபுரே ।
வாக்தேவி விந்த்ய வாஸினி பாலே புவனேசி
பாலய சிரம் மாம் ॥

காலபைரவர்

खड्गं कपालं डमरुं त्रिशूलं हस्ताम्बुजे संदधतं त्रिणेत्रम् ।
दिगम्बरं भस्मविभूषिताङ्गं नमाम्यहं भैरवमिन्दुचूडम् ॥

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம்
ஹஸ்தாம்புஜே ஸந்ததம் த்ரிநேத்ரம் ।
திகம்பரம் பஸ்ம விபூஷிதாங்கம்
நமாம்யஹம் பைரவ மிந்துசூடம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஹனுமான்

वीताखिलविषयेच्छं जातानन्दाश्रुपुलकमत्यच्छम् ।
सीतापतिदूताद्यं वातात्मजमद्य भावये हृद्यम् ॥

வீதாகில விஷயேச்சம் ஜாதானந்தாச்ரு புலகமத்யச்சம் ।
ஸீதாபதி தூதாத்யம் வாதாத்மஜமத்ய
பாவயே ஹ்ருத்யம் ॥

ருஷ்யசிருங்கேசுவர:

शान्तामानसहंसं कान्ताराशक्तमुनिवरैः सेव्यम् ।
शान्ताहंकृतिवेद्यं कान्तार्थं नौमि शृङ्गशिवम् ॥

சாந்தா மானஸ ஹம்ஸம் காந்தாராஸக்த
முனிவரைஸ்ஸேவ்யம் ।
சாந்தாஹங்கிருதி வேத்யம் காந்தார்த்தம்
நெளமி ச்ருங்கசிவம் ॥

5

ஸ்ரீ மலஹானிகரேசுவர ஸ்தோத்திரம்

[கீழ்கண்ட பிரார்த்தனை சுலோகங்கள் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் 33-வது பீடாதிபதியாக அலங்கரித்த ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்மபாரதி ஸ்வாமி களால் அனுகிரகம் செய்யப்பட்டவை.]

[பகவானுக்கும் பவானிக்கும் திருக்கல்யாண உத்ஸவ காலத்தில் மாப்பிள்ளை (பகவான்) காசி யாத்திரைக்கு புறப் படும் சந்தர்ப்பத்தை வர்ணிக்கிறவை]

स्वग्रामगमनवाञ्छा सर्वेषां प्रकृतिसिद्धा हि ।
काशीयात्रा तस्मात् काशीश तवैव खलु युक्ता ॥

ஸ்வக்ராம கமன வாஞ்சா
ஸர்வேஷாம் ப்ரகிருதி ஸித்தா ஹி ।
காசீயாத்ரா தஸ்மாத்
காசீச தவைவ கலு யுக்தா ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உலகத்தில் உள்ள எல்லோரும் தன்னுடைய கிராமத்துக்கு செல்லவேண்டும் என்ற அவா ஏற்படுவது சஹஜம்தானே'' ஏ! காசிநாதா! அதேபோல் நீங்கள் காசி யாத்திரையாகப் புறப்படுவது என்பது யுக்தமேதான்.

शीर्षान्मुक्ताहारव्याजात्स्वर्गापगा शम्भोः ।
गङ्गाधर विस्रस्ता नृत्यं किमु कुर्वतस्तवेशान ॥

சீர்ஷாந் முக்தாஹார வ்யாஜாத் ஸ்வர்காபகா சம்போ: ।
கங்காதர விஸ்ரஸ்தா ந்ருத்யம் கிமு குர்வதஸ்தவேசான ॥

"ஏ கங்காதரனே! நீங்கள் நர்த்தனம் செய்யும்போது உங்கள் சிரஸில் உள்ள கங்கை இரு பக்கங்களிலும் வழியும், இப்போது உங்கள் தலையிலிருந்து உங்கள் பக்க பாகங்களில் தொங்கிக்கொண்டிருக்கும் முத்துஹாரங்கள் (கங்கையின் ஜலம் வெளுப்பு) என்ற வியாஜத்தினுல் முன் சொல்லப்பட்ட நர்த்தனக் காக்ஷியைக் காட்டுவதுபோல் இருக்கிறது". (2)

शरदिन्दुसोदरमुखं करनिर्जितपङ्कजं कृपाम्भोधिम् ।
त्वां पश्यन्तं मामिह क्षुत्तृष्णे नैव बाधेते ॥ ३ ॥

சரதிந்து ஸோதரமுகம்
கரநிர்ஜித பங்கஜம் க்ருபாம்போதிம் ।
த்வாம் பச்யந்தம் மாமிஹ
க்ஷுத்த்ருஷ்ணே நைவ பாதேதே ॥

"சரத் காலத்து சந்திரனுக்கு உடன்பிறந்ததுபோன்ற உங்களுடைய முகத்தையும், தாமரையைத் தோற்கடிக்கும் காந்தியுடன் விளங்கும் கைகளையுடைய கருணைத் தேக்க மாகிய (கருணைக் குளமாகிய) உங்களை பார்த்துக்கொண்டு இருக்கும் என்னை பசி, தாகம் இவ்விரண்டும் பாதிக்கிறதில்லை'' (சந்திரனிடம் இருப்பது அம்ருதம். இது பசியை வர வொட்டாமல் தடுக்கும். கருணைக் குளத்திலிருந்து வெளி வரும் கருணை கடாக்ஷமான ஜலம் தாகத்தை வரவொட்டாது.)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

सर्वाङ्गसुन्दर विभो करुणामृतपूरपूरितापङ्ग ।
त्वां चक्षुषी ममेमे न त्यजतः किं करोमि वद शम्भो ॥

ஸர்வாங்க சுந்தர விபோ
கருணாம்ருத பூரபூரிதாபங்க ।
த்வாம் சக்ஷுஷீ மமேமே
ந த்யஜத: கிம் கரோமி வத சம்போ ॥

"ஏ பிரபோ! ஸர்வாங்க சுந்தரனே! கருணையாகிய அம்ருதத்தால் மிகுந்த கடைக்கண் பார்வையைக் கொண்டவரே! உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் என் கண்கள் உங்களை விட்டு விலகமாட்டேன் என்கின்றனவே என் செய்வேன் சொல்லும் பரமசிவனே".

[குறிப்பு :- பரமசிவனின் ரூபம் எப்போதும் வசீகர முள்ளது. மாப்பிள்ளைக் கோலம் (சாதாரண மனிதனாக இருந் தாலும்) கண்களைக் கவரும், இரண்டும் ஒரே இடத்தில் அமைந்த மாப்பிள்ளை ரூபமான பரமசிவனிடத்தில் கண்கள் முற்றிலும் ஆழ்ந்து அமைந்துவிட்டன என்பது ஆச்சரிய மல்லவே].

[பக்தி சுதாதரங்கிணீ]

तस्मात्तवेशमनिशं मूर्तिः प्रस्फुरति चित्तकञ्जाते ।
यद्वत्तथा कुरु त्वं करुणां गिरिजात्मजशिशुभानो ॥

தஸ்மாத் தவேச மநிசம்
மூர்த்தி: ப்ரஸ்புரதி சித்தகஞ்ஜாதே ।
யத்வத் ததா குரு த்வம்
கருணாம் கிரிஜாப்ஜசிசுபானோ ॥

ஏ! ஸோமாஸ்கந்த மூர்த்தியே! ஈசனே! என் ஹ்ருதய கமலத்தில் எப்போதும். உன்னுடைய உருவம் ப்ரகாசித்துக் கொண்டிருக்க எப்படிச் செய்யவேண்டுமோ. அப்படிச் செய் (செய்யவேண்டுகிறேன்).

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीभवानीचन्द्रशेकरस्तोत्रम् ॥

ஸ்ரீ பவானீ சந்த்ரசேகர ஸ்தோத்ரம்

[முன் சொல்லப்பட்ட திருக்கல்யாண மஹோத்ஸவ சமயத்தில் விவாக மேடையில் அமர்ந்திருக்கும் பவானி, சந்த்ரசேகரர் இரண்டு மூர்த்திகளையும் சேர்த்து ஸ்தோத்தரிக்கிறார்.]

वैवाहिकासनासीनौ वैमानिकवरार्चितौ ।
वैराग्यदायिनौ दत्तां वैशद्यं मम चेतसः ॥

வைவாஹிகாஸனாஸீநௌ
வைமானிகவரார்சிதௌ ।
வைராக்யதாயினௌ தத்தாம்
வைசத்யம் மம சேதஸ: ॥

விவாக மேடையின் மீது வீற்றிருக்கிறவர்களும், விமானத்தில் சஞ்சரிக்கும் தேவர்களால் நன்கு பூஜிக்கப் பட்டவர்களும், வைராக்கியத்தைக் கொடுப்பவர்களுமான பவானீ சந்த்ரசேகரமூர்த்திகள் எனது மனதில் தெளிவை அளிக்கட்டும். 1

भक्तेष्टदाननिरतौ भयवारणदीक्षितौ ।
भवेतां भव्यसन्तत्यै भवानीचन्द्रशेखरौ ॥

பக்தேஷ்ட தானநிரதௌ
பயவாரண தீக்ஷிதௌ ।
பவேதாம் பவ்ய ஸந்தத்யை
பவானீ சந்த்ரசேகரௌ ॥

பக்தர்களின் வேண்டுகோளை அளிப்பவர்களும் பயத்தை போக்கடிப்பதில் சூரர்களுமான ஸ்ரீபவானி சந்திரசேகர மூர்த்திகள் இருவரும் (எல்லோருக்கும்) சாசுவதமான மங்களத்தை உண்டு பண்ணட்டும் (என வேண்டுகிறேன்) 2

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

भरताग्रजसंसेव्यौ भवसागरतारकौ ।
भर्मभूषौ नमस्यामि भवानीचन्द्रशेखरौ ॥

பரதாக்ரஜ ஸம்ஸேவ்யௌ
பவஸாகர தாரகௌ ।
பர்மபூஷௌ நமஸ்யாமி
பவானீ சந்த்ரசேகரௌ ॥

பரதனுடைய தமையனால் பூஜிக்கப்பட்டவர்களும், (ராமேசுவரத்தில் ஸ்ரீராமர் சிவபார்வதி மூர்த்திகளைப் பூஜித்தது ராமாயணத்தில் காணலாம்.

(अत्रपूर्वं महादेवः प्रसादमकरोत्पुरा)

ஸம்ஸாரக்கடலை கடக்கவைக்கும் சக்தி வாய்ந்தவர்களும், (கல்யாண சமயத்தில்) ஸ்வர்ணாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருப்பவர்களுமான பவானீ சந்த்ரசேகர மூர்த்திகளை நமஸ்கரிக்கிறேன்.

(भर्म=தங்கம் இது விசேஷ பதம்)

7

॥ श्रीमदृश्यशृङ्गेश्वरस्तुतिः ॥

ஸ்ரீ ருச்யச்ருங்கேச்வர ஸ்துதி

[ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் ஆலயம் இருக்கும் இடத்தில் முன்பு ஸ்ரீருச்யச்ருங்க மகரிஷி தவம் செய்தார் என்பது ஐதீகம். அந்த ருச்யச்ருங்க மகரிஷியைப்பற்றி ஸ்ரீ சாரதா பீடத்து 33-வது பீடாதிபதிகள் இயற்றிய சுலோகங்கள் பின் வருபவை].

कष्टारिवर्गदलनं शिष्टालिसमर्चितांघ्रिपाथोजम् ।
नष्टाविद्यैर्गम्यं पुष्टात्मारावकालिमाकलये ॥ १ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கஷ்டார்ரிவர்கதளநம் ஶிஷ்டாளிஸமர்சிதாங்க்ரி
பாதோஜம் ।
நஷ்டாவித்யைர் கம்யம் புஷ்டாத்மாராதகாளி
மாகலயே ॥

துன்பத்தைத் தரும் எதிரிக் கூட்டத்தை அழிப்பவரும், ஸாதுக்கூட்டத்தால் பூஜிக்கப்பட்ட தாமரை போன்ற பாதங்களை உடையவரும் அக்ஞானம் நீங்கியவர்களால் அடையத்தக்கவரும், தன்னை ஆராதிப்பவர்களை எல்லாவற்றுலும் புஷ்டியுள்ளவர்களாகச் செய்பவருமான ருச்யச்ருங்கேசுவரரை தியானிக்கிறேன். 1

प्राणायामैर्ध्यानैर्नष्टं चित्तं विधाय मुनिवर्याः ।
यत्पश्यन्ति हृदब्जे शान्ताभाग्यं नमामि तत्किञ्चित् ॥ २ ॥

ப்ராணயாமைர் த்யானைர் நஷ்டம் சித்தம் விதாய
முநிவர்யா: ।
யத் பஶ்யந்தி ஹ்ருதப்ஜே ஶாந்தாபாக்யம் நமாமி
தத் கிஞ்சித் ॥

முனிவர்கள் ப்ராணயாமங்களாலும், தியானங்களாலும் சித்தவிருத்திகளை அழித்து தங்கள் ஹிருதய கமலத்தில் எந்த ஸ்வருபத்தைப் பார்க்கின்றனரோ அந்த சாந்தையின் பாக்யமான ருச்யச்ருங்கேசுவரரை வணங்குகிறேன். 2

वेदोत्तमाङ्गगेयं नादोपास्त्यादिसाधनात्माख्यम् ।
खेदोन्मूलनदक्षं भेदोपाध्यादिवर्जितं नौमि ॥ ३ ॥

வேதோத்தமாங்க கேயம் நாதோபாஸ்த்யாதி
ஸாதநாத்மாக்யம் ।
கேதோந்மூலந தக்ஷம் பேதோபாத்யாதிவர்ஜிதம்
நௌமி ॥

வேதத்தின் சிரஸ்ஸான உபநிஷத்துக்களில் போற்றப் படுபவரும், நாதோபாஸனம் முதலியவற்றிற்கு ஸாதனமான நாமாவைக் கொண்டவரும், துன்பங்களைப் போக்குவதில் ஸமர்த்தரும், வேற்றுமை, உபாதி முதலியவைகளற்றவருமான ருச்யச்ருங்கேசுவரரை வணங்குகிறேன். 3

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शान्तामानसहंसं कान्तारासक्तमुनिवरैः सेव्यम् ।
शान्ताहंकृतिवेद्यं कान्तार्धं नौमि ऋश्यशृङ्गशिवम् ॥ ४ ॥

ஶாந்தா மானஸ ஹம்ஸம் காந்தாராஸக்த
முநிவரை : ஸேவ்யம் ।
ஶாந்தா ஹங்க்ருதி வேத்யம் காந்தார்தம்
நௌமி ருச்ய ஶ்ருங்கஶிவம் ॥

சாந்தையின் மனமென்னும் மானஸஸரஸ்ஸில் விளையாடும் ஹம்ஸம் போன்றவரும், காட்டில் வஸிப்பதில் விருப்பம் கொண்ட முனிசிரேஷ்டர்களால் ஸேவிக்கத்தகுந்தவரும், அஹங்காரமற்றவர்களால் அறியத்தக்கவரும் பாதி உடலில் மனைவியைக் கொண்டவருமான ருச்யச்ருங்க சிவனை நமஸ்கரிக்கிறேன். —பக்திஸுதாதரங்கிணீ

8

॥ श्री गौरीगिरीशकल्याणस्तवः ॥

ஸ்ரீ கௌரீகிரீச கல்யாணஸ்தவம்

[எல்லா தேவாலயங்களிலும் கல்யாணோத்ஸவம் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. இதுபோலவே சிருங்ககிரியில் மிக ப்ராசீனமான ஸ்ரீ மலஹானிகரேசுவரர் ஆலயத்திலும் கல்யாணோத்ஸவம் நடப்பது வழக்கம். அச்சமயம் சிருங்கேரி ஜகத்குருக்களும் அங்கு வந்து அருள் புரிவார்கள். கல்யாண வேஷத்துடன் அமர்ந்திருக்கும் ஆதி தம்பதிகளான ஸ்ரீ பவானி அம்பாளையும் ஸ்ரீ மலஹானிகரேசுவரரையும் தர்சனம் செய்த ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட ஸ்தோத்ரம் இது. கல்யாண ஸமயத்தில் தம்பதிகள் ஆநந்த பரவசர்களாக இருக்கும் நிலையில் எல்லாருக்கும் மங்களத்தைக் கொடுத்து ஸந்தோஷப் படுத்தவேண்டும் என்று இந்த ஸ்தோத்ரத்தில் ஸ்ரீ ஜகத்குரு பிரார்த்திக்கிறார்]

चन्द्रार्धप्रविभासिमस्तकतटौ तन्द्राविहीनौ सदा
भक्तौघप्रतिपालने निजतनुच्छाययाजिताकर्युतौ ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ कारुण्यवारांनिधी
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

சந்த்ரார்த்த ப்ரவிபாசிமஸ்தகதெள
தந்த்ரா விஹீநெள ஸதா
பக்தெளக ப்ரதி பாலனே நிஜதனுச்
சாயா ஜிதார்காயுதெள 1
ச்ருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதெள
காருண்யவாராம்நிதீ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கெளரீ கிரீசெள முதா ॥ 1

அர்த்த (பாதி) சந்திரனுடன் விளங்கும் சிரஸை உடையவர்கள். பக்தர் குழுவைக் காப்பதில் எப்பொழுதும் சோம்பலில்லாதவர்கள். தங்கள் சரீர காந்தியினல் பதினுராயிரம் ஸூரியர்களை ஜயித்தவர்கள். (பதினுராயிரம் ஸூரியர்கள் ஒரே சமயத்தில் உதித்தால் எத்தனை காந்தி இருக்குமோ அத்தனை காந்தியுள்ள சரீரமுடையவர்கள்). சிருங்ககிரியிலுள்ள விவாஹ மண்டபத்திலிருக்கும் கருணைக்கடலான இத்தகைய பார்வதீ பரமேசுவர தம்பதிகள் ஸந்தோஷத்துடன் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைக் கொடுக்கட்டும். 1

अन्योन्यार्चनतत्परौ मधुरवाक्संतोषितान्योन्यकौ
चन्द्रार्धाञ्चितशेखरौ प्रणमतामिष्टार्थदौ सत्वरम् ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ शृङ्गारजन्मावनी
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

அந்யோந்யார்சன தத்பரெள மதுரவாக்
ஸந்தோஷிதான்யோன்யகெள
சந்த்ரார்தாஞ்சித சேகரெள ப்ரணமதாம்
இஷ்டார்த்ததெள ஸத்வரம் 1
ச்ருங்காத்ரிஸ்த விவாஹ மண்டபகதெள
சிருங்கார ஜன்மாவனீ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கெளரீ கிரீசெள முதா ॥ 2

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒருவருக்கொருவர் கொண்டாடுவதில் ஈடுபட்டவர்கள். இனிமையான வாக்கினுல் ஒருவருக்கொருவர் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுபவர்கள். அர்த்த சந்திரனுல் சோபிக்கும் சிரஸையுடையவர்கள். வணங்குபவர்களுக்கு வேகமாக விரும்பிய பொருளைக் கொடுப்பவர்கள் சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்திலுள்ள சிருங்காரத்துக்குப் பிறப்பிடமான கௌரீகிரீச தம்பதிகள் ஸந்தோஷத்துடன் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைச் செய்யட்டும். 2

(சிவனுடைய பெருமைகளை பார்வதி இனிமையான வாக்கால் கூறுவதை கேட்டு மஹேசன் ஆனந்தமடைகிருர். இதுபோல பார்வதியும் தன் பெருமைகளை இனிய வாக்கால் மஹேசன் கூறுவதைக் கேட்டு ஆனந்தமடைகிருள்).

कामापत्तिविभूतिकारणदृशौ सोमार्धभूषोज्ज्वलौ
सामाम्नायसुगीयमानचरितौ रामार्चिताङ्घ्रिद्वयौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ माणिक्यभूषान्वितौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

காமாபத்தி விபூதி காரண த்ருசௌ
ஸோமார்த்த பூஷோஜ்வலௌ
ஸாமாம்னுய ஸுகீயமான சரிதௌ
ராமார்ச்சிதாங்க்ரி த்வயௌ 1
ச்ருங்காத்ரிஸ்த விவாஹ மண்டபகதௌ
மாணிக்ய பூஷான்விதௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ll 3

மன்மதனுடைய அழிவிற்கும், தோற்றத்திற்கும் காரணமான பார்வையை உடையவர்கள் அர்த்த சந்திர அணியால் பிரகாசிப்பவர்கள். ஸாமவேதத்தால் போற்றப்படுகிற சரித்ரத்தை உடையவர்கள். ஸ்ரீ ராமனுல் பூஜிக்கப்பட்ட (அல்லது விவாஹ ஸமயத்தில் பெண்களால் பூஜிக்கப்பட்ட) இரு திருவடிகளையுடையவர்கள். மாணிக்க ரத்னுபரணமணிந்து சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்திலிருக்கும் பார்வதீ பரமேச தம்பதிகள் எல்லா உலகங்களுக்கும் சந்தோஷத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

துடன் மங்களத்தைச் செய்யட்டும். (தவத்தில் ஈடுபட்ட பரமேசுவரனுக்கு பார்வதி பணிவிடை செய்யும்பொழுது காமன்விட்ட மலரம்புகளால் தன் மனம் நிலை குலைவதைக் கண்டு கோபத்தால் பரமசிவன் நெற்றிக்கண் பார்வையால் மன்மதனை சாம்பலாக்கினர். மன்மதனின் நாசத்திற்கு சிவனின் கோபப்பார்வை காரணம். ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுர-ஸுந்தரி பண்டாஸுரனை வதம் செய்தபின் தேவர்களின் பிரார்த்தனையின் பேரில் தன் கடாக்ஷத்தாலேயே மன்மதனைப் பிழைக்கும்படி செய்தாள் என்று லலிதோபாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது. இதே விஷயம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில்

'हरनेत्राग्निसंदग्धकामसंजीवनौषधिः'

என்ற நாமாவில் ஹரனுடைய நெற்றிக்கண்ணால் சாம்பலான மன்மதனை பிழைக்கச்செய்கிற ஒஷதி அம்பாள் என்று கூறப் பட்டுள்ளது. ஆகவே மன்மதனின் அழிவிற்கு ஈசனின் கோபப்பார்வை காரணம். அம்பாளின் அன்புப்பார்வை மன்மதன் பிழைப்பதற்குக் காரணம்.

सौन्दर्येण परस्परं प्रमुदितावन्योन्यचित्तस्थितौ
राकाचन्द्रसमानवक्त्रकमलौ पाकाब्जकालंकृतौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ तुङ्गातटावासिनौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

ஸௌந்தர்யேண பரஸ்பரம் ப்ரமுதிதா
வன்யோன்ய சித்தஸ்திதௌ
ராகாசந்த்ரஸமான வக்த்ரகமலௌ
பாகாப்ஜ காலங்க்ருதௌ ।
ச்ருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
துங்காதடாவாசினௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ॥

ஒருவருக்கொருவர் அழகினால் ஸந்தோஷமடைந்தவர்கள். ஒருவருக்கொருவர் மனதிலிருப்பவர்கள் பூர்ணிமா சந்திரனுக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொப்பான தாமரைபோன்ற முகமுள்ளவர்கள் பாலசந்திரனுல் அலங்கரிக்கப்பட்டவர்கள். துங்கா நதிக்கரையில் வஸிக்கிற சிருங்கேரியிலுள்ள விவாஹ மண்டபத்திலிருக்கிற இந்த பார்வதீபரமேச தம்பதிகள் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தை வளரச்செய்யட்டும். (பார்வதியின் அழகைக் கண்டு ஈசன் ஆனந்தமடைகிருர். இதுபோல ஈசனின் அழகைக்கண்டு பார்வதீ ஆனந்தமடைகிருள். மிகுந்த பிரீதியுடன் எப்பொழுதும் பார்வதியை நினைத்துக்கொண்டு இருப்பதால் ஈசனின் மனதில் பார்வதி இருக்கிருள். இது போலவே ஈசனை பிரீதியுடன் நினைத்துக்கொண்டிருப்பதால் பார்வதியின் மனதில் ஈசன் இருக்கிருர். 4

सिंहोक्षाग्र्यगती महोन्नतपदं संप्रापयन्तौ नता-
न्नंहोराशिनिवारणैकनिपुणौ ब्रह्मेन्द्रविष्ण्वर्चितौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ गाङ्गेयभूषोज्ज्वलौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

ஸிம்ஹோக்ஷாக்ர்யகதீ மஹோன்னதபதம்
ஸம்ப்ராபயந்தௌ நதாந்
அம்ஹோராசி நிவாரணைக நிபுணௌ
ப்ரஹ்மேந்திர விஷ்ண்வர்ச்சிதௌ 1
ச்ருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
காங்கேய பூஷோஜ்ஜ்வலௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ll

ஸிம்ஹம்போலவும் சிறந்த காளைப்போலவும் நடை உள்ளவர்கள் தன்னை வணங்குபவர்களை பெரிய மேலான ஸ்தானத்தை அடையும்படி செய்பவர்கள் பாபக் கூட்டத்தை போக்குவதில் மிகவும் திறமையுள்ளவர்கள். பிரஹ்மா, இந்திரன், விஷ்ணு இவர்களால் பூஜிக்கப்பட்டவர்கள். தங்க நகைகளால் பிரகாசிக்கிறவர்கள் சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்திலுள்ள இந்த பார்வதீ பரமேசர்கள் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைச் செய்யட்டும். 5

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कस्तूरीघनसारचर्चिततनू प्रस्तूयमानौ सुरै-
रस्तूक्त्या प्रणतेष्टपूरणकरौ कस्तूपलब्धिप्रदौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतावङ्गावधूतेन्दुभौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

கஸ்தூரீ கனஸாரசர்ச்சித தனூ
ப்ரஸ்தூயமானௌ ஸுரை:
அஸ்தூக்த்யா ப்ரணதேஷ்ட பூரணகரௌ
கஸ்தூபலப்திப்ரதௌ ।
ச்ருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
அங்காவதூதேந்துபௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ॥

கஸ்தூரீ, பச்சைக்கற்பூரம் இவைகளால் பூசப்பட்ட சரீரம் உள்ளவர்கள் தேவர்களால் சிறப்பாக துதிக்கப்படுபவர்கள் இருக்கட்டும் என்ற சொல்லாலேயே வணங்குபவர்களின் விருப்பங்கள் நிறைவேறும்படி செய்பவர்கள். உண்மை அறிவைக் கொடுப்பவர்கள். தனது சரீர காந்தியால் சந்திரனை யும் நக்ஷத்திரத்தையும் பழிப்பவர்கள். சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்தில் இருக்கும் இந்த கௌரீகிரீச தம்பதிகள் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைச் செய்யட்டும் (பக்தர்கள் வணங்கி தங்கள் விருப்பத்தைச் சொன்னவுடன் ‘அஸ்து’ (உண்டாகட்டும்) என்று சொல்லு கிறார்கள். உடனே அவரவர் விரும்பிய பொருள் கிடைத்து
விடுகிறது. வேறு முயற்சி எதுவும் செய்வதில்லை. 6

वाणीनिर्जितहंसकोकिलरवौ पाणीकृताम्भोरुहौ
वेणीकेशविनिर्जिताहिचपलौ क्षोणीसमानक्षमौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ तुङ्गेष्टजालप्रदौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வாணீ நிர்ஜித ஹம்ஸகோகிலரவௌ
பாணீக்ருதாம்போருஹௌ
வேணீ கேசவி நிர்ஜிதாஹி சபலௌ
க்ஷோணீஸமானக்ஷமௌ ।
சிருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
துங்கேஷ்டஜாலப்ரதௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ॥

பேச்சின் (குரலின்) இனிமையால் ஹம்ஸம், குயில் இவற்றின் நாதத்தை ஜயித்தவர்கள். தாமரை மலரைக் கைகளாகக் கொண்டவர்கள். வேணீ, கேசம் இவைகளால் கருநாகத்தின் கர்வத்தைப் போக்கியவர்கள். பூமிக்கு ஸமமான பொறுமை உள்ளவர்கள். சிறந்த விரும்பிய பொருள்கள் யாவற்றையும் கொடுப்பவர்கள். சிருங்கேரியில் உள்ள கல்யாண மண்டபத்தில் இருக்கும் பார்வதீ, பரமேசுவரர்கள் எல்லா உலகங்களுக்கும் ஸந்தோஷத்துடன் மங்களத்தைக் கொடுக்கட்டும். (ஹம்ஸம் போலவும், குயில் போலவும் குரலில் இனிமை, தாமரை போன்ற கைகள், கருநாகம் போன்ற கேசம் உள்ளவர்கள்). 7

दम्भाहंकृतिदोषशून्यपुरुषैः संभावनीयौ सदा
जम्भारातिमुखामरेन्द्रविनुतौ कुम्भात्मजाद्यर्चितौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ वाग्दानदीक्षाधरौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

தம்பாஹங்கிருதி தோஷசூன்யபுருஷை:
ஸம்பாவனீயௌ ஸதா
ஜம்பாராதி முகாமரேந்திர விநுதௌ
கும்பாத்மஜாத்யர்சிதௌ ।
சிருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
வாக்தான தீக்ஷாதரௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எப்பொழுதும் டம்பம், கர்வம் இந்த தோஷங்களற்ற மனிதர்களால் போற்றத்தக்கவர்கள். இந்திரன் முதலான சிறந்த தேவர்களால் துதிக்கப்பட்டவர்கள். அகஸ்தியர் முதலானவர்களால் பூஜிக்கப்பட்டவர்கள். சிறந்த வாக்கைக் கொடுப்பதில் பொறுப்புள்ளவர்கள். சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்திலிருக்கும் கௌரியும், கிரீசனும் ஸந்தோஷத்துடன் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைச் செய்யட்டும். 8

शापानुग्रहशक्तिदाननिपुणौ तापापनोदक्षमौ
सोपानक्रमतोऽधिकारिभिरनुप्राप्यौ क्षमासागरौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ लावण्यपाथोनिधी
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

சாபானுக்ரஹ சக்திதான நிபுணௌ
தாபாபநோதக்ஷமௌ
ஸோபானக்ரமதோ அதிகாரி பிரனு
ப்ராப்யௌ க்ஷமாஸாகரௌ 1
சிருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
லாவண்ய பாதோ நிதீ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ll

சாபம் கொடுப்பதற்கும், அருள்புரிவதற்கும் ஸாமர்த்யத்தைக் கொடுப்பதில் திறமைசாலிகள். தாபத்தைப் போக்குவதில் சக்தியுள்ளவர்கள். தகுதியுள்ளவர்களால் படிப்படியாக அடையத்தக்கவர்கள் பொறுமைக்குகடல். சிருங்கேரியிலுள்ள கல்யாண மண்டபத்திலிருக்கும் அழகுக் கடலான பார்வதீ பரமேசுவரர்கள் ஸந்தோஷத்துடன் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைச் செய்யட்டும். 9

शोणाम्भोरुहतुल्यपादयुगलौ बाणार्चनातोषितौ
वीणाधृन्मुनिगीयमानविभवौ बालारुणाभाम्बरौ ।
शृङ्गाद्रिस्थविवाहमण्टपगतौ तुल्याधिकैर्वर्जितौ
कल्याणं तनुतां समस्तजगतां गौरीगिरीशौ मुदा ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சோணும்போருஹ துல்ய பாதயுகலௌ
பாணார்ச்சனு தோஷிதௌ
வீணு த்ருந்முனி கீயமான விபவௌ
டாலாருணு ம்பரௌ ।
ச்ருங்காத்ரிஸ்த விவாக மண்டபகதௌ
துல்யாதிகைர்வர்ஜிதௌ
கல்யாணம் தனுதாம் ஸமஸ்த ஜகதாம்
கௌரீகிரீசௌ முதா ॥

செந்தாமரைபோல் அழகிய இரு திருவடிகளுடையவர்கள். பாணத்தால் அர்ச்சிப்பதால் (அல்லது பாணலிங்கத்தில் அர்ச்சனை செய்வதால்) ஸந்தோஷப்பட்டவர்கள். வீணுவாணி யான நாரதால் போற்றப்படும் பெருமைகளுள்ளவர்கள். காலை ஸூரியன்போல் சிவப்பு ஆடையணிந்தவர்கள். ஸமனுகவோ, மேலானவனுகவோ ஒருவருமில்லாதவர்கள். சிருங்கேரியில் உள்ள விவாஹ மண்டபத்திலிருக்கிற பார்வதீ பரமேசுவர தம்பதிகள் எல்லா உலகங்களுக்கும் மங்களத்தைத் தரட்டும்.

(வேடவேஷம் கொண்ட சிவனுடன் சண்டை செய்யும் போது அர்ஜுனன் பாணத்தால் அடித்தான். அதை அர்ச்சனை யாகக் கருதி ஸந்தோஷமடைந்து அவனுக்கு ஈசுவரன் பாசுபதாஸ்த்ரம் கொடுத்தருளினுன்).

9

புராதன ஆலயம்

ஸ்ரீ சிருங்கேரியில் இருக்கும் ஸ்ரீ மலஹானிகரேசுவரரின் ஆலயம் சிருங்கேரி கிராமத்தின் மத்தியில் உள்ள ஒரு குன்றின் மேலே அமைந்திருக்கிறது. இந்த குன்றின் மேல்ஏறுவதற்கு சுமார் 150 கருங்கல் படிகள் உள்ளன. [இந்தப் படிக்கட்டு இப்போது இருக்கும் நிலையில் சுமார் 300 வருஷங்களுக்கு முன்பே இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஏனெனில் கி. பி. 17-வது நூற்றுண்டில் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதி (I) (1622-1663) அவர்கள் காலத்தில் இயற்றப்பட்ட குருவம்ச காவியத்தில் அவருடைய குரு வயதான காலத்திலும் உத்ஸாகத்துடன் மலையின் படிகளை ஏறிவந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது].

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மலையின் மேல் அமைந்திருக்கும் ஈசுவரனுக்கு மலஹானிகரேசுவரர் (மனிதனின் மனதில் இருக்கும் அக்ஞானம் என்ற அழுக்கைப் போக்கடிப்பவர்) என்றும், தேவிக்கு ஸ்ரீ பமானீ என்றும் பெயர்.

இந்த மலையும் அதில் அமைந்திருக்கும் தெய்வ வடிவங்கள் ஸ்ரீ ஆதி ஆசார்யாரின் காலத்திலேயே இருந்தது என்றும், இந்த இடத்தில்தான் ருஷ்ய சிருங்கர் தவம் செய்தார் என்று ஸ்ரீ ஆதி ஆசார்யாள் சிருங்கேரிக்கே ஒரு பெருமையை கொடுத்தார் என்பது ஸ்ரீ மாதவீய சங்கர விஜயத்தில் (12-64/65) காணப்படுகிறது. இந்த கிரந்தம் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் 12-வது பீடாதிபதியாக அமர்ந்த ஸ்ரீ வித்யாரண்யர் காலத்தில் (1380-86) உருவாக்கப்பட்டது.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் 24-வது பீடாதிபதிகளாக அமர்ந்த ஸ்ரீ அபிநவ நரஸிம்மபாரதீ (I) (கி. பி. 1599-1622) இந்த தேவஸ்தானத்தின் முன் மண்டபத்தில் உள்ள கருங்கல் கம்பத்தில் ஒரு மஞ்சள் கிழங்கினால் ஸ்ரீ விநாயகரின் பிம்பத்தை வரைந்து பூஜை செய்தார் என்றும், அந்த கணபதியின் உருவம் வளர்ந்துகொண்டு இப்போது கம்பதின் முன்புறத்தில் பூர்ண வடிவுடன் விளங்குகிறது என்பது எல்லோரும் அறிந்ததே. இதன் விவரம் பின்பு காணலாம்.

ஸ்ரீ சாரதா பீடத்தில் 25-வது பீடாதிபதியாக அமர்ந்த ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதீ ஸ்வாமிகள் கி. பி. 1622-1663) இந்த ஆலயத்தில் தினசரி வழிபாட்டுடன் திருக்கல்யாண உத்ஸவத்தைத் தன் காலத்தில் ஆரம்பித்து அதற்குத் தானே உத்ஸவத்துக்குகந்த சுலோகங்களை இயற்றி அதை அமுலாக்கினார். இதன் விவரம் பின்னாலே காணலாம்.

ஸ்ரீ சாரதா பீடத்தில் 33-வது பீடாதிபதியாக அமர்ந்த ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ ஸ்வாமிகள் (கி. பி. 1879-1912) இந்த ஆலயத்தில் உள்ள தேவதா மூர்த்திகள் பேரில் பல ஸ்தோத்திரங்கள் இயற்றியிருக்கிறார். இவைகளையும் பின்னால் காணலாம். இவருடைய கவன சுலோகங்கள் எல்லாம் "பக்திஸுதாதரங்கிணீ" என்ற பெயரில் ஸ்ரீரங்கம் வாணி விலாஸ் அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இம்மகானுக்குப் பின் தோன்றிய எல்லா பீடாதிபதிகளும் இந்த தேவஸ்தானத்தின் பூஜை தாங்களே நேராக (வருஷத்தில் குறிப்பிட்ட சில நாட்களில்—விசேஷமாக சிவராத்ரி தினத்தில்) பூஜை செய்துகொண்டு வருகிறார்கள்

ஸ்ரீ மலஹானிகரேச்வரர் ஆலய ஜீர்ணோத்தாரண துவக்க விழா

ராமாயண காலம் முதல் பிரஸித்தமானது மலஹானிகரேச்வரர் ஆலயம். ரிஷ்ய சிருங்கரரின் தகப்பனார் இங்கு தன் பத்னியுடன் தபஸ் செய்துகொண்டிருந்தார். இவருக்கு ரிஷ்ய சிருங்கர் என்ற ஒரே புதல்வன். தலையில் கொம்பு இருந்ததால் அந்த பெயர் அவருக்கு வந்தது. ரோமபாதரின் ராஜ்யத்தில் மழை இல்லை என்று இந்த ரிஷ்ய மகரிஷியை அங்கு அழைத்துச் சென்றால் மழை வரும் என்று அரசன் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான். வருஷங்கள் சுமார் 12 கழிந்தன. ரிஷ்ய சிருங்கரை அழைத்துச் சென்றதும் மழை வந்துவிட்டது. அரசன் தன் குமாரியான சாந்தாவை ரிஷ்ய சிருங்கருக்கு திருமணம் செய்வித்தார். வயதான காரணத்தால் விபாண்டக மகரிஷியும், அவருடைய பத்னியும் ஈசுவரனை ஆராதித்த பலனால் ஈசுவரனுடன் ஐக்கியம் அடைந்தார்கள். ரிஷ்ய சிருங்கர் திரும்பி வந்தபோது தன் தாயார், தகப்பனார் இருவரையும் காணாது அவர்கள் பரமசிவனுடன் ஐக்கியமாய் விட்டார்கள் என்று தெரிந்து அங்கிருந்து மஹாலிங்கமான மலஹானிகரேச்வரருக்கு ஆலயம் கட்டி தானும் அங்கேயே தங்கினார் என்று இந்த கிராமவாசிகள் சொல்லுகிறார்கள்.

இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பெரியது. தேவியின் பெயர் ஸ்ரீ பவானி அம்மாள். பிராசீனமான இந்த கோவில் மதில் சுவர்கள் பிராகாரங்கள் ஜீர்ணமடைந்துவிட்டன. அவைகளை உடனே ஜீர்ணோத்தாரணம் செய்ய ஸ்ரீ மஹா ஸந்நிதானம் எண்ணம் கொண்டார். இதற்கு சுமார் 15 லக்ஷம் ரூபாய் செலவாகும். ஆந்திர சர்க்கார் இதற்கு போதுமான தொகையை நன்கொடையாகக் கொடுக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஜீர்ணோத்தாரண வேலை துவங்கி இருக்கிறது.

இந்தக் கோவிலின் முகத்துவாரத்து அடிக்கல் நாட்டு விழாவை கர்நாடக கவர்னர் மேதகு ஸ்ரீ கோவிந்தநாராயணன் அவர்கள் 23—7—81 அன்று இரண்டு ஜகத்குருக்களின் ஸந்நிதியில் நடத்தினார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வருடந்தோறும் சிருங்கேரி ஸ்ரீ மலஹானிகரேச்வரர், பவானி, மற்றும் ஸ்தம்பகணபதி ஆலயங்களில் நடைபெறும்

ஸேவை விபரம்

ஸ்ரீ மலஹானிகரேச்வரர் ஆலயம்

தினசரி 3 கால பூஜை, பிராயச்சித்த ஆவாஹனம், பலிதானம், கிரஹணம், உத்தராயண, தக்ஷிணாயன புண்ணிய காலங்களில் விசேஷ பூஜை பிரதி திங்கட்கிழமை தோறும் தைல அபிஷேகம், தாரா அபிஷேகம், பஞ்சாம்ருதத்துடன் விசேஷ பூஜை. பிரதி பிரதோஷ தினத்திலும் பிரதோஷ பூஜை-சனி பிரதோஷத்தன்று விசேஷ பூஜை.

பவானி அம்மன் ஆலயம்

தினசரி 2 கால பூஜை.

ஸ்தம்பகணபதி ஆலயம்

தினசரி 2 கால பூஜை. வாரசௌதி தினத்தன்று மோதகம், நைவேத்யம். சங்கஷ்ட சதுர்த்தி தினத்தன்று இரவு பஞ்சாம்ருதம், பஞ்சகஜ்யத்துடன் விசேஷ பூஜை.

சைத்ர சுத்த ஷஷ்டி

ஜகத்குரு ஸ்ரீ ஸந்நிதானம், ஸ்ரீ பாரதீதீர்த்த ஸ்வாமிகள் அவர்களது வர்தந்தி சுபதினததில் மலஹானிகரேச்வரர் ஆலயம் சதருத்ராபிஷேகம், விசேஷ பூஜை. பவானி அம்மன் ஆலயம், மற்றும் ஸ்தம்பகணபதி ஆலயங்களில் விசேஷ பூஜை.

சைத்ர சுத்த பௌர்ணமி

தாமனருபணத்தை முன்னிட்டு, பவானி அம்மன் மலஹானிகரேச்வரர் ஆலயத்தில் ஹோமம், மற்றும் விசேஷ பூஜை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வைசாக சுத்த ஏகாதசி

கல்யாண உத்ஸவத்தைத் முன்னிட்டு வரபூஜை ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குருக்களின் முன்னிலையில் துவாதசி அன்று கிரிஜா கல்யாணம். அன்றுமுதல் பிரதமை வரை விசேஷ பூஜை ஹவனு மற்றும் அன்னதானம்.

ஜ்யேஷ்ட சுத்த நவமி

பவானி அம்மன் மஹோத்ஸவத்தை முன்னிட்டு விசேஷ பூஜை, அன்ன சந்தர்ப்பணை.

ஆஷாட சுத்த துவாதசி

சாதுர்மாஸ்ய தீக்ஷையை முன்னிட்டு ஸ்ரீ ஜகத்குருக்களின் மலஹானிகரேச்வரர் ஆலயம், பவானி அம்மன் ஆலயம், ஸ்தம்பகணபதி ஆலயம் ஆகியவற்றிற்கு விஜயம்-தரிசனம்.

சிரவண மாஸம்

சுத்த பிரதமை தினத்திலிருந்து அமாவாசை முடிய-தினசரி சதருத்ராபிஷேகம் பஞ்சாம்ருதத்துடன் விசேஷ பூஜை. பகுள மற்றும் கிருஷ்ண அஷ்டமி தினங்களில் விசேஷ பூஜை. சதுர்தசி தினத்தன்று பவித்ராருபண ஹாவண பூஜை.

பாத்ரபத மாஸம்

பவானி அம்மனுக்கு சுத்த த்ருதீய தினத்தன்று பஞ்சாம்ருதத்துடன் விசேஷ பூஜை. ஸ்தம்பகணபதிக்கு சதுர்த்தி தினத்தன்று விசேஷ பூஜை. கேதார ஈச்வர விரதத்தை முன்னிட்டு அஷ்டமி தினத்தன்று மூன்று ஆலயங்களிலும் விசேஷ பூஜை. அனந்த விரதத்தை முன்னிட்டு, சதுர்தசி அன்று விசேஷ பூஜை. பாத்ரபத சுத்த பௌர்ணமியன்று ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குருக்களின் சாதுர்மாஸ்ய விரத பூர்த்தியை யொட்டி, இந்த மூன்று ஆலயங்களுக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குருக்கள் விஜயம்-தரிசனம்.

அச்வாயுஜ மாஸம்

பிரதமை முதல் நவமி தினம் முடிய, நவராத்ரி வைபவத்தை முன்னிட்டு பவானி அம்மன் ஆலயத்தில் விசேஷ பூஜை. வர்தந்தி தினத்தை முன்னிட்டு, இந்த மூன்று ஆலயங்களிலும்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ மஹாஸந்நிதானம், ஸ்ரீ ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் நடத்தும் விசேஷ பூஜை.

கார்த்திக மாஸம்

கோபூஜை, தான்ய சங்கர பூஜை, மூன்று ஆலயங்களிலும் விசேஷ பூஜை. சுத்த பௌர்ணமியன்று கிருத்திகை நக்ஷத்திரத்தில் கிருத்திகோத்ஸவம். நன்பகலில் பஞ்சபிரஹ்ம ஹாவனு, இரவில் ரங்க பூஜை, மற்றும் விசேஷ பூஜை. பிரதமை தினத்திலிருந்து அமாவாசை முடிய மஹாபூஜை. தீபோத்ஸவம் பிரதமை தினத்தன்று பீதாம்பரம் ஸமர்ப்பணம்.

புஷ்ய மாஸ்யம்

தனுர்மாஸ பூஜை, பஞ்சாம்ருத பூஜை ஆருத்ரா தரிசனத்திற்கு முதல் நாள் அண்டகாசுரவதம். திருவாதிரையுடன் கூடிய, பௌர்ணமி தினத்தன்று ஆருத்ரா தர்சனம்.

மாக மாஸம்

பகுளதசமியன்று த்வஜா ரோஹனம், சப்தாரதகமிரித்ய ஹோமம், விசேஷ பூஜை, பலிதானம், பகுள தசமி முதல் பால்குண சுத்த பீடிகை முடிய அன்னதானம் அமாவாசை தினத்தன்று ரதோத்ஸவம்.

பால்குண மாஸம்

சுத்த பிரதமைதினத்தன்று மலஹானிகரேச்வர ஸ்வாமியின் சந்தானேத்ஸவம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மலஹானிகரேச்வரர் ஆலய கும்பாபிஷேகத்திற்கான நிகழ்ச்சி நிரல்

22—1—85 ஸஹஸ்ரமோதக கணபதி ஹோமம்
நவக்ரஹ ஹோமம்.

23—1—85 ஸ்ரீ சாரதாம்பிகைக்கு மஹா அபிஷேகம்
கோடி அர்ச்சனை ஆரம்பம்.

26—1—85 ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குருக்களின் சாரதா பூஜை.

31—1—85 அதிருத்ர புரஸ்சரனம், சாதுர்மாஸ்ய யக்ஞம் சதுர்வேத அஷ்டதச பூர்ண பாராயணம் ஆரம்பம்.

3—2—85 ரிக்வேத, யஜுர்வேத, சாமவேத ஸம்ஹிதா ஹோமங்கள் ஆரம்பம்.

5—2—85 கோடி அர்ச்சனை பூர்த்தி, லலிதா ஹோமம்.

7—2—85 கும்பாபிஷேகாங்க யாகசாலா பிரவேசம்.

8—2—85 ஸ்ரீ சாரதா மஹோத்ஸவம்.

11—2—85 கும்பாபிஷேகம் அதிருத்ர ஸம்ஹிதா ஹோம பூர்ணாஹுதி

12—2—85 ஸஹஸ்ர சண்டி யாக பூர்ணாஹுதி.

கலை நிகழ்ச்சிகள்

(22—1—85 முதல் 12—2—85 முடிய)

பிரதிதினம் இரவு 9-00 மணி

22—1—85 ஓலிடி வெங்கடேஸ்வரலு — பாட்டு

23—1—85 ஸ்ரீ ஸத்வித்யா சஞ்ஜீவினி ஸம்ஸ்கிருத பாடசாலா ஆண்டுவிழா வைபவங்கள்

24—1—85 ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த பாலிகா ப்ரௌடசாலா ஆண்டுவிழா வைபவங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

25-1-85 சிக்கல் சகோதரிகள் — புல்லாங்குழல்
26-1-85 M. L. வசந்தகுமாரி — பாட்டு.
27-1-85 மஹாதேவப்பா & பார்ட்டி மைசூர் — வயலின்.
28-1-85 பத்ரகிரி அச்சுததாஸ் — ஹரி கதை
29-1-85 மதுரை G. S மணி —பாட்டு.
30-1-85 விஜயராகவராவ் — பன்சூரி
31-1-85 மல்லிகார்ஜுனமன்சூர் ஹிந்துஸ்தானி — பாட்டு.
1-2-85 தெலுங்கு பிரசங்கம் மற்றும் யக்ஷகானம்
2-2-85 V. துரைசாமி ஐயங்கார் — வீணை
3-2-85 காந்தி ஸாஹித்ய சங்கம் — கமகரூபிகா
4-2-85 H. K. நாராயண — பாட்டு
5-2-85 ஆதிசங்கராச்சார்யா — ஸம்ஸ்க்ருத திரைப்படம்
6-2-85 பஸவராஜ ராஜகுரு — ஹிந்துஸ்தானி பாட்டு
7-2-85 M. S. கோபாலகிருஷ்ணன் — வயலின்
8-2-85 கேரள பஞ்ச வாத்யம்
9-2-85 யக்ஷகானம்
10-2-85 செம்மங்குடி ஸ்ரீநிவாஸ அய்யர் — பாட்டு
11-2-85 மஹாராஜபுரம் சந்தானம் — பாட்டு
12-2-85 பாலமுரளிகிருஷ்ண — பாட்டு

1985 பிப்ரவரி 2, 3, 4, 5. தேதிகளில் காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரையும், மாலை 4-00 மணி முதல் 6-00 மணிவரையும், தர்ம மற்றும் ஸாஹித்ய ஸம்மேளனங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीप्रपञ्चमातापित्रष्टकम् ॥

(ஸ்ரீ ப்ரபஞ்சமாதாபித்ரஷ்டகம்)

प्रकाशितजगज्जालौ प्रतुष्यन्मुनिबालकौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ १ ॥

ப்ரகாசித ஜகஜ்ஜாலௌ ப்ரதுஷ்யன் முனிபாலகௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ ஜாயாபதீ ஸ்துமः ॥

எல்லா உலகங்களையும் வெளிப்படுத்துகிறவர்களும், ஸந்தோஷமடைகிற ரிஷிகுமாரனை (ருச்யச்ருங்கரை) உடையவர்களும், உலகத்திற்குத் தாய், தந்தையர்களுமான பழமையான தம்பதிகளை துதிக்கிறோம். (1)

(ஸிருஷ்டி என்பது புதிய படைப்பு அல்ல. பிரளய காலத்தில் காரணமான மாயையில் ஸூக்ஷ்மமாக மறைந்து இருந்த பிரபஞ்சத்தை எல்லோரும் அறியும்படியாக வெளிப்படுத்துவதுதான் ஸிருஷ்டி என்பது. எள்ளில் முன்னாலேயே இருக்கும் எண்ணைதான் செக்கில் ஆட்டினவுடன் வெளிப்படுகிறது. மண்ணில் ஸூக்ஷ்மமாக மறைந்திருக்கும் குடத்தை குயவன் வெளிப்படுத்துகிறான்).

प्रणाममात्रसंतुष्टौ प्रयतैरुपसेवितौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ २ ॥

ப்ரணாமமாத்ர ஸந்துஷ்டௌ ப்ரயதை ருபஸேவிதௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்துமः ॥ 2

நமஸ்காரம் ஒன்றினாலேயே ஸந்தோஷிக்கிறவர்களும், தூய்மையான மனமுள்ளவர்களால் ஸேவிக்கப்பட்டவர்களும் உலகத்திற்கு தாய், தந்தையர்களுமான பழமையான தம்பதிகளை போற்றுகிறோம், (2)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रणुन्नपापकान्तारौ प्रसूनस्रग्विभूषितौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ३ ॥

ப்ரணுன்னபாப காந்தாரௌ
ப்ரஸூன ஸ்ரக்விபூஷிதௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்துமः ॥ 3

பாபமென்ற காட்டை அழிப்பவர்களும், மலர், மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவர்களும் உலகத்திற்குத் தாய், தந்தையர்களுமான பழமையான தம்பதிகளை துதிக்கிறோம்.

प्रपन्नपालनव्यग्रौ प्रतापजितभास्करौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ४ ॥

ப்ரபந்ந பாலன வ்யக்ரௌ ப்ரதாபஜித பாஸ்கரௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்துமः ॥ 4

சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டவர்களும், தேஜஸ்ஸினால் ஸூரியனை ஜயித்தவர்களும் உலகத்திற்குத் தாய், தந்தையர்களுமான பழமையான தம்பதிகளை துதிக்கிறோம். (4)

प्रसादलेशतः स्याद्धि प्रमतिर्जडराड्ययोः ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ५ ॥

ப்ரஸாத லேசத: ஸ்யாத்தி ப்ரமதிர்ஜடராட் யயோ: ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்துமः ॥ 5

எவர்களுடைய சிறிதளவு அருளால் அறிவற்றவர்களின் தலைவன் சிறந்த அறிவாளியாக ஆகிறானோ, அந்த பிரபஞ்சத்திற்கு தாய், தந்தையர்களான பழைய தம்பதிகளை துதிக்கிறோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रह्लादमाप्नुयुर्नित्यं प्रणता यत्पदाब्जयोः ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ६ ॥

ப்ரஹ்லாத மாப்னுயுர் நித்யம்
ப்ரணதா யத்பதாப்ஜயோ: ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்தும: ॥ 6

எவர்களுடைய திருவடித் தாமரைகளில் வணங்கியவர்கள் எப்பொழுதும் ஆனந்தத்தை அடைவார்களோ, அந்த உலகிற்குத் தாய், தந்தையர்களான பழைய தம்பதிகளை ஸ்தோத்ரம் செய்கிறோம். (6)

प्रमदाभिः सुरेशानां प्रकाममुपसेवितौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ७ ॥

ப்ரமதாபி: ஸுரேசானாம் ப்ரகாம முபஸேவிதௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்தும: ॥ 7

தேவநாயகர்களின் மனைவிகளால் நன்கு ஸேவிக்கப் பட்டவர்களும், உலகத்திற்குத் தாய், தந்தையர்களுமான பழைய தம்பதிகளை துதிக்கிறோம். (7)

प्रशान्तचित्तचापल्यैः प्रत्यहं परिचिन्तितौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ ८ ॥

ப்ரசாந்த சித்த சாபல்யை: ப்ரத்யஹம் பரிசிந்திதௌ ।
ப்ரபஞ்சமாதா பிதரௌ ப்ராஞ்சௌ
ஜாயாபதீ ஸ்தும: ॥ 8

மனதின் ஆசையை அடக்கியவர்களால் தினந்தோறும் நினைக்கப்பட்டவர்களும், உலகத்திற்குத் தாய், தந்தையர்களுமான பழைய தம்பதிகளை துதிக்கிறோம். (8)

Sri Vidyabharathi Book Centre, Sringeri